வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 09.12.2023 சனிக்கிழமை | இதழ் : 341 | பக்கங்கள் : 12

# 2024இல் ஜனாதிபதித் தேர்தல் தொடர்ந்து ஏனைய தேர்தல்கள்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 09

அடுத்த வருடம் (2024) ஜனாதிபதி தேர்தலும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற, மாகாண சபைகளுக்கான தேர்தலும் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பேரவை மற்றும் தேரர்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், தேர்தலின் பின்னர் அரசமைப்பு திருத்தங்கள் அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கத்தை மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதன்போது, உலக தமிழர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான மகா சங்கத்தின் தேரர் கள் ஆகியோர் இணைந்து இமயமலை பிரகடனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர்.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 6 முக்கிய விடயங்களை 'இமய மலை பிரகடனம்' உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# வடக்கு-கிழக்கு மக்களுக்கு தீர்வொன்றை வழங்குங்கள்

### சபையில் சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

வடக்கு- கிழக்கு மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற வெளிவிவகார அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

உலகத்துக்கு நல்லிணக்கம் தொடர்பாக எடுத்துக் கூறாமல் நாட்டிலும் அதனை நிறைவேற்ற

11

### வட்டு. இளைஞன் மரணம்

# அடையாள அணிவகுப்பில் 4 பொலிஸார் அடையாளம்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்று கூறப்படும் இளைஞரின் மரணத்துடன் தொடர்புடைய பொலிஸாரை பிரதான சாட்சி நேற்று அடையாளம் காட்டினார்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட அடையாள அணிவகுப் பிலேயே இளைஞரை சித்திரவதை செய்தனர் என்று சந்தேகிக்கப்படும் நான்கு

11

# 20 கோடி சலுகைக் கடன் ஏ. டி. வங்கி வழங்குகிறது!

ரோக்கியோ, டிசெ. 09

இலங்கையின் நிதித்துறையை வலுப்படுத்துவதற்காக சலுகை நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏ. டி. பி.) அரசாங்கத்துக்கு 20 கோடி அமெரிக்க டொலரை (நம் நாட்டு மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 546 கோடி ரூபாய்) வழங்க இணக்கம் வெளியிட்டுள்ளது.

நிதித்துறை வலுவாக்கம் மற்றும் சீர்திருத்தத் திட்டம் உள்ளிட்ட இரண்டு துணைத் திட்டங்களுக்காக தலா 20 கோடி அமெரிக்க டொலர் சலுகைக் கடனாக வழங்கப்படவுள்ளது.

இந்தக் கடனுடன் ஆசிய அபிவிருத்தி

11

# 'லஞ்ச் சீற்'றுக்கு வருகிறது தடை!

கொழும்பு,டிசெ. 09

உணவு பொதியிடலுக்குப் பயன்படுத்தப்படும் 'லஞ்ச் சீற்'றுக்கு தடை விதிக்க மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை கருத்தில் கொண்டே இந்தத் தடைக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தலைமையில் அண்மையில் கூடிய சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான துறை சார் கண்காணிப்புக் குழுவில் இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

லஞ்ச்சீற்

11

# உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவ முடிவு!

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல்

கொழும்பு, டிசெ. 09

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நிலைமாறுகால நீதி மற்றும் யுத்தத்துக்குப் பின்னரான நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு முக்கியமான படியாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட ஆணைக்குழு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்படுவதோடு, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்தாலோசித்து குறித்த சட்டமூலம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

அத்துடன், சட்டமூலம் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. யுத்தத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் நாட்டு

11

# தோட்டத் தொழிலாளருக்கு நாளாந்த சம்பளம் ரூ. 1700!

### 31ஆம் திகதிக்கு முடிவை அறிவிக்க பணிப்பு

கொழும்பு, டிசெ. 09

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும் தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ரூ.1700 வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் அறியத்தருமாறும் ஜனாதிபதி தோட்டக் கம்பனி பிரதானிகளுக்கு

11



# இலங்கை கடலில் மீன்பிடி அனுமதி; இந்தியா யோசனையே முன்வைப்பு

### உடன்படிக்கை இல்லை என்கிறார் அலிசப்ரி

கொழும்பு, டிசெ. 09

இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் இலங்கை கடலுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்குமாறு இந்தியா யோசனையொன்றை முன்வைத்துள்ளது. எனினும், இது தொடர்பில் உடன்படிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் கடந்த ஆண்டு கலந்துரையாடல் ஒன்று

11

# வடக்கில் இனி ஈ-பில் மட்டுமே!

### மின்சார சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 09

வடக்கு மாகாணத்தில் 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அச்சிட்டு விநியோகிக்கப்படும் மின் பட்டியல் நிறுத்தப்படுகிறது. பதிலாக ஈ-பில் எனப்படும் இலத்திரனியல் மின்பட்டியலே அனுப்பப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

11

# பயங்கரவாத சட்டத்தின் கீழான கைதுகளை நானும் ஏற்கவில்லை!

### வெளிவிவகார அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 09

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை நானும் அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதை எமது அரசாங்கம் உறுதி செய்யும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், காஸாவுக்கு ஆயுதம் வழங்கும்

11

## இப்படியும் நடக்கிறது

இப்போதெல்லாம் யாராவது தொலைபேசியில் தொடர்புகொண்டால் அதனை ஏற்றுக்கொண்டு பேசுவதற்கு தயக்கமாக இருக்கின்றது.

யார் அழைப்பு எடுத்தாலும் கேட்கின்ற கேள்வி ஒன்றாகத்தான் இருக்கின்றது.

அது வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அழைப்பாக இருந்தாலும் சரி, உள்ளூர் பிரமுகர்களிடமிருந்து வருகின்ற அழைப்பாக இருந்தாலும் சரி எல்லோருமே கேட்பது ஒரே கேள்வியைத்தான்.

அவர்களில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதுதான் கேள்வி. அது எது சம்பந்தமான கேள்வி என்பதும் நான் எழுதித்தான் தெரியவேண்டும் என்பது அல்லவே.

தமிழரசு கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவுசெய்யப் படுவாரா? சுமந்திரன் தெரிவு செய்யப்படுவாரா?

இந்தக் கேள்வியை தெற்கிலிருந்தும் நண்பர்கள் கேட்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அவர்கள் எல்லோருக்கும் நான் சொல்வது, தமிழரசு கட்சியின் சரித்திரம் இந்தத் தடவை மாற்றி எழுதப்படாது என்பதுதான். இருவரில் ஒருவர் போட்டியிலிருந்து விலகிக் கொள்வார்கள் அல்லது அங்குள்ள கட்சி நலன்விரும்பிகள் சேர்ந்து புதிய ஒருவரை தலைவராக்க முயற்சி செய்வார்கள் என்பதுதான்.

சில மாதங்களுக்கு முன்னர், தமிழரசின் வெளிநாட்டுக் கிளை ஒன்றிலிருந்து மாவை சேனாதிராசாவின் தலைமையை மாற்றவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட சிலர் தாயகத்தில் பலருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். சிறீதரனும் சுமந்திரனும் போட்டி போட்டால் யாராவது ஒருவர் தானே வெற்றிபெறலாம். அப்படி நடக்கின்றபோது தோற்றுப்போகின்றவர் தனித்து இயங்க முயற்சி செய்யலாம். அப்படி நடந்தால் அது கட்சிக்கு மேலும் பின்னடைவை கொண்டுவந்துவிடும் என்பதால் இருவரும் இல்லாமல் வேறு ஒருவரை தற்காலிகமாகத் தலைவராக நியமிக்கலாம் என்றும் அதற்கு பொருத்தமானவர் யார் என்பது குறித்தும் அந்த வெளிநாட்டுக் கிளையினர் பல்வேறு தரப்பினரிடமும் அபிப்பிராயம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு அபிப்பிராயம் பெற்றவர்களின் தெரிவாக இருந்தது வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அவர்கள் தான். அவர் அதற்கு பொருத்தமானவர்தான் என்று ஊர்க்குருவியும் அக்காலத்தில் எழுதியிருந்தது ஞாபகமிருக்கலாம்.

ஆனால், இப்போது தேர்தலில் போட்டியிடும் இருவருமே பிடிவாதமாக இருப்பதாகவும் தாமே வெற்றிபெறுவோம் என்பதில் இருவருக்கும் இருக்கும் அதீத நம்பிக்கையே அதற்குக் காரணம் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு சில ஆயிரம் வாக்குகளைப் பெற்ற ஒருவரும் தேர்தலுக்கு முன்னதாக தான் வெற்றிபெறுவேன் என்றுதான் நம்பிக்கொண்டிருப்பார். தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று நம்பிக்கொண்டு யாரும் போட்டியிடுவதில்லைதான்.

அதனால்தான், இருவருமே தாங்களே வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையில் தத்தமது ஆதரவாளர்களைக் கொண்டு சமூக வலைத்தளங்களில் அடுத்த தலைவர் இவர்தான் என்று பிரசாரம் செய்துவரு கின்றனர்.

தமிழரசு கட்சியின் எழுபத்தி ஐந்து ஆண்டுகால சரித்திரத்தை இந்த முறை தலைவர் தெரிவு மாற்றி எழுதுமா என்பது தெரியவில்லை.

ஆனால், இருவரும் இல்லாத வேறு ஒருவரை தெரிவுசெய்வது என்று கட்சியில் பெரியவர்கள் முடிவெடுத்தாலும் அந்த வேறு ஒருவருக்கான தெரிவில் இனி சீ. வீ. கே. சிவஞானம் ஐயா இடம்பெறமுடியாது. ஏனெனில், அவர் தற்போதைய வேட்பாளர்கள் இருவரில் ஒருவரான சுமந்திரனை தலைவர் பதவிக்கான தெரிவாக முன்மொழிந்திருக்கிறார்.

ஆக, இருவரில் ஒருவரை முன்மொழிந்த அவர், இப்போது சுமந்திரன் ஆதரவாளராக மாறியிருப்பதால் அவர் தெரிவாவது சாத்தியமில்லாது போயிருக்கின்றது.

கடைசியில் தேர்தல் இல்லை என்ற நிலைமை வந்தால், அதிகம் ஏன் மாவையே இன்னும் ஒரு தடவை தொடர்ந்தால் என்ன என்று கட்சிக்காரர்கள் முடிவெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று இந்தப் பத்தியில் இது பற்றி எழுதவேண்டும் என்று நினைத்ததற்கு காரணமே அவர் கேட்ட கேள்வி ஒன்றுதான்.

அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர். நேற்று அதிகாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அவரும் கேட்டது அதே விடயத்தைத்தான். ஆனால், 'அண்ணே... சிறீதரன் தானே சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்று புகழ்ந்துபேசியவர். அவர் எப்படி இப்போது அவரை எதிர்த்து போட்டியிடுகிறார்?' என்று கேட்டார்.

விடுதலை புலிகள் இயக்கத்தையும் தமிழரசு கட்சியையும் ஒன்றாக ஒப்பிடுவது பொருத்தமாக இருக்காது. ஆனாலும், அதற்கு - அதாவது புலிகள் இயக்கத்துக்கு எப்படி பாலசிங்கம் இருந்தாரோ அதேபோல தமிழரசுக் கட்சிக்கு சுமந்திரன் இருப்பதாக அவர் சொன்னதே ஒரு விடயத்தை அழுத்திச் சொல்வதற்காகத்தானே? என்று சொன்னேன். அவருக்கு புரியவில்லை.

"அண்ணே, சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் இருந்தது போல இருக்கச் சொல்லியிருக்கிறார். தானே தமிழரசின் 'பிரபாகரன்' என்பதை அழுத்திச் சொல்வதற்காக" என்றேன்.

**- ஊர்க்குருவி.**

# இந்திய மீனவர் அத்துமீறல் உடன் நிறுத்தப்படவேண்டும்

## சபையில் சித்தார்த்தன் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை உடன் நிறுத்தப்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீன்பிடிப் பிரச்னை ஒன்று இருக்கின்றது. மிக அண்மையிலே தமிழ் நாட்டில் இருந்து நூற்றுக்கணக்கான ட்ரோலர்கள் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

இது நேரடியாக தனியே மீன்பிடி அமைச்சருடன் கதைப்பது அல்ல. கொள்கை ரீதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருக்கக்கூடிய உறவைக் கொண்டுதான் இவ்விடயத்தைச் செய்ய முடியும்.

ஆகவேதான் நாங்கள் மீண்டும் மீண்டும் இந்த உறவுகளை சரியாகக் கொண்டுவர வேண்டுமென்பதை கூறுகின்றோம். ஏனென்றால் இருபது, முப்பது வருடங்களாக இவ்விடயம் பேசப்படுகின்றது.

ஒன்றுமே நடக்கவில்லை. தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் வருகின்றார்கள். அது நிச்சயமாக தடுக்கப்படவேண்டும். அவ்வாறு தடுக்கப்படாவிட்டால் எங்களுடைய கரையோரங்களில் வாழக்கூடிய மீனவ சமூகத்தினுடைய முழு வருமானமும் இல்லாமல்போகும். அவர்கள் ஒரு வறுமைக்கோட்டின்கீழ் செல்லக் கூடிய ஒரு நிலைமை உருவாகிக்கொண்டு வருகின்றது.

ஆகவே, அமைச்சர் தனியாக அல்ல, அமைச்சர் வேண்டுமென்றால் நாங்கள் கூட வருவோம். நாங்கள் நேரடியாகக் கதைத்து அதை நிச்சயமாக நிறுத்துவதற்கான முழுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதை நாங்கள் நிச்சயம் செய்ய வேண்டும் - என்றார். (அ)

## களனி பல்கலைக்கழகத்தின் கல்வி செயல்பாடு மீள ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 09

பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து மூடப்பட்ட களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப்பீடம், வணிகப்பீடம், முகாமைத்துவப்பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றின் கல்வி செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் குறித்த கல்வி செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக களனி பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகள் நிறைவடையும் வரையில், மருத்துவப்பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து கல்வி செயல்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துப்பாக்கி, பணத்துடன் 8 இளைஞர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 09

ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் துப்பாக்கியுடன் இளைஞர்கள் 8 பேர் கொழும்பு - ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மஹரகம , சுந்தானை பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்களாவர்.

இவர்கள் குறித்த ஹோட்டலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொண்டதை குறித்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## 2024இலிருந்து சீனாவுக்கு கறுவா பட்டை ஏற்றுமதி!

கொழும்பு, டிசெ. 09

உள்நாட்டு கறுவாப்பட்டைக்கு சீன சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றது. இதனால் வருடாந்தம் 200 கோடி டொலர் பெறுமதியான கறுவாவை சீனாவுக்கு அடுத்த வருட தொடக்கத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏற்றுமதியானது நாட்டின் கறுவா சந்தைக்கு பெரும் அனுகூலம் என கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜானக லிந்தர தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பலனாக அண்மையில் ஜனாதிபதியின் சீன பயணத்தின்போது இதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கிழக்கு முனைய செயல்பாடு 2024 ஜூனில் ஆரம்பமாகும்!

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆறு புதிய பாரந்தூக்கிகளைப் பயன்படுத்தி கொள்கலன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்தார்.

கிழக்கு முனையத்தின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்தார். 825 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கட்டுமானத்திற்காக செலவிடப்படுகிறது.

கிழக்கு முனையமானது வருடாந்தம் 20 இலட்சம் கொள்கலன்களை இயக்கும் திறன் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வங்கி அட்டையை திருடி மது வாங்கியவர் கைது!

கொழும்பு, டிசெ. 09

முச்சக்கரவண்டி ஒன்றின் பாதுகாப்பு பெட்டியிலிருந்து வங்கி அட்டையை திருடிய வரை பொலிஸாரால் கைதுசெய்துள்ளனர்.

கம்பஹா - வத்துபிட்டிவலை பிரதேசத்தை சேர்ந்தவரே வங்கி அட்டையை திருட்டுக் கொடுத்தவராவார். கைது செய்யப்பட்டவர் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவராவார்.

நிட்டம்புவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் இவர் வங்கி அட்டையை பயன்படுத்தி நிட்டம்புவை பிரதேசத்தில் உள்ள மதுபான நிலையத்திலிருந்து மூன்று மதுபான போத்தல்களை கொள்வனவு செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர் பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுபானசாலைகள் திறக்கும் நேரத்தில் இன்றுமுதல் மாற்றம்!

கொழும்பு, டிசெ. 09

மதுபானசாலைகளை திறக்கும் நேரங்களில் இன்று சனிக்கிழமை முதல் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கலால் வரித் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதன்படி, சாதாரண தர மதுபானசாலைகளை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அனுமதி பெற்ற மதுபானசாலைகள் முற்பகல் 10 மணி முதல் இரவு 11 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அனுமதி பெற்ற மதுபானசாலைகள் முற்பகல் 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.12.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சீனா தொடர்பில் அவதானம் தேவை

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் - பிராந்திய சக்தியான இந்தியாவின் கரிசனைகள் தொடர்பில் ஆட்சியாளர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். வடக்கு - கிழக்கு பகுதிகளில் இந்திய - சீன போட்டி நிலைமையை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயல்படக்கூடாது - அவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்களே பாதிக்கப்படுவார்கள் என்றும் சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியவாத கட்சிகளின் தலைவர்கள் இலங்கையை மையப்படுத்தி இடம்பெறும் புவிசார் அரசியல் விடயங்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்துவதில்லை. விடயங்களை மேலோட்டமாகவே நோக்குவது உண்டு. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் சர்வதேசமயப்பட்ட ஒன்று. இதனை மூன்று கட்டங்களாக நோக்கலாம். ஒன்று, தமிழ்த் தேசிய அரசியல் மிதவாத தமிழ் தலைமைகளின் கட்டுப்பாட்டிலிருந்து ஆயுதப் போராட்ட இயக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்ற காலம். இரண்டாவது, விடுதலைப் புலிகள் ஒரேயோர் ஆயுத அமைப்பாக தமிழர் அரசியலில் செல்வாக்குச் செலுத்திய காலம். மூன்றாவது போருக்கு பின்னரான காலம்.

தமிழ் மக்களுக்கான சர்வதேச அரசியல் என்பது அடிப்படையில் பிராந்திய அரசியல்தான். பிராந்திய சக்தியான இந்தியாவே, ஈழத் தமிழ் மக்களுக்கான சர்வதேச அரசியலின் திறவுகோலாகும். இந்தியாவை தவிர்த்து தமிழர்களுக்கு சர்வதேச அரசியல் இல்லை. இந்த விடயத்தை எப்போதெல்லாம் தமிழர் தரப்பு மறந்து செயல்படுகின்றதோ அப்போதெல்லாம் வெறும் கற்பனைகளில் காலத்தை விரயம் செய்யவே நேரிடும்.

அமெரிக்காவின் நகர்வுகள் உலகளாவியது. அது பிராந்திய அடிப்படையைக் கொண்டதல்ல. இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலன்களை வெற்றிகொள்ளும் நகர்வில் இந்தியா ஒரு பிரதான பங்காளியாகும். இந்தப் பின்புலத்தில் இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் நகர்வுகள் இந்தியாவின் கரிசனைகளுடன் பின்னிப்பிணைந்ததாகும்.

இந்திய - அமெரிக்க நகர்வுகள் இலங்கையில் சந்திக்கும் பிரதான புள்ளி - சீனாவின் மேலாதிக்க நகர்வுகளாகும். சீனா ஒரு மேலாதிக்க நிகழ்ச்சி நிரலுடன் நகர்கின்றது. அதன் இலக்கு தெளிவானது. அதாவது, ஆசியாவின் மேலாதிக்க சக்தியாக தன்னை நிறுவுவது.

சீனா ஒருவேளை ஆசியாவின் மேலாதிக்க சக்தியாக தன்னை நிறுவுவதில் வெற்றிபெறுமாயின் அதன் பின்னர் அமெரிக்காவின் உலகளாவிய மேலாதிக்கம் வீழ்ச்சியடைந்துவிடும். இன்றைய சீன - அமெரிக்க போட்டியின் அடிப்படை இதுதான்.

இந்தப் பின்புலத்தில்தான் வடக்கு - கிழக்குக்குள் காலூன்ற முற்படும் சீனா தொடர்பில் தமிழ்த் தலைமைகள் மிகுந்த அவதானத்துடன் செயலாற்ற வேண்டும்.

அந்த வகையில் தர்மலிங்கம் சித்தார்த்தன் இந்த விடயங்கள் தொடர்பில் பேசியிருப்பது வரவேற்க வேண்டிய விடயமாகும். அவர் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயம் முக்கியமானது. தாய்வானுக்குள் அமெரிக்கா செல்வாக்குச் செலுத்துவதை சீனா கடுமையாக ஆட்சேபிக்கின்றது. தனது இராணுவ பலத்தைக் கொண்டு தாய்வானை மிரட்டுகின்றது. ஆனால், தான் இந்தியாவின் அயல் நாடுகளுக்குள் ஊடுருவுவதை இந்தியா எதிர்க்கக்கூடாதென்று வாதிடுகின்றது. இந்தியாவின் உடனடி அயல் நாடொன்றுக்குள் வலுவாகக் காலூன்ற முற்படுவதை இலங்கையின் உள்விவகாரமாகக் காண்பிக்க முற்படுகின்றது. உண்மையில் இது உள்விவகாரமல்ல. சித்தார்த்தன் சுட்டிக் காட்டியிருப்பது போன்று, இது இந்தியாவுக்கு எதிரான ஒரு நகர்வு. இந்தியாவுக்கு எதிரான நகர்வுகளின்போது தமிழ் தலைமைகள் என்போர் அமைதியாக இருக்க முடியுமா?

# 47 பவுண் நகைகள் திருட்டு; தம்பதியர் உட்பட மூவர் கைது!

*கிளிநொச்சி, டிசெ. 09*

*வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பெண் ஒருவரிடம் 47 பவுண் நகைகளை திருடினர் என்ற சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கடந்த மாதம் சாந்தபுரம் பகுதியில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பிரதான சந்தேக நபர், அவரின் மனைவி மற்றும் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கிளிநொச்சி அம்பாள் குளத்தில் வசித்து வரும் கணவன் மற்றும் மனைவி இருவரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்களிடமிருந்த திருடப்பட்ட தங்க நகைகளின் ஒரு பகுதி மற்றும் ஐபோன் ஒன்றும், ஒரு இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் ஹெரோயின் 430 மில்லி கிராம், வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.*

*அத்துடன், உதயநகர் பிர தேசத்தில் வசிக்கும் நபர் ஒருவரும் இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)*

# உக்ரைனுக்காக முன்னாள் படையினர் போரிடுவதை தடுக்க முடியாத நிலைமை!

## அமைச்சர் அலி சப்ரி

*கொழும்பு, டிசெ. 09*

*இலங்கையின் முன்னாள் படை சிப்பாய்கள் உக்ரைன் இராணுவத்துடன் இணைந்து செயல்படுவதை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.*

*வெளிநாட்டில் இலங்கையின் முன்னாள் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.*

*உக்ரைனின் படையணியினரோடு இலங்கையின் முன்னாள் படையினர் இணைந்து செயல்படுவதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு, “அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் தங்கள் சொந்த விருப்பத்தில் உக்ரைன் சென்றுள்ளனர் இலங்கையர்கள் அனைவருக்கும் நடமாடுவதற்கான சுதந்திரம் உள்ளது. மேலும் அவர்கள் அங்கு சென்றதும் இலங்கையால் அவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது”, என அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*அவர்கள் தாங்கள் தங்கியுள்ள நாட்டின் சட்டங்களை மீறினால் அல்லது இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பின்னர் தலைமறைவானால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். உக்ரைனுக்காக போரிட சென்ற முன்னாள் இராணுவத்தினர் குறித்த புள்ளி விபரங்கள் அரசாங்கத்திடம் இல்லை - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*(ஐ)*

# பாடசாலை வானுக்குள் வைத்து 16 வயது மாணவி வன்புணர்வு!

*கொழும்பு, டிசெ. 09*

*பாடசாலை வானுக்குள் வைத்து மாணவியை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் வானின் சாரதியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.*

*இரத்தினபுரி எம்பிலிப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 16 வயது மாணவியை இவ்வாறு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*இந்த சம்பவம் தொடர்பில் மாணவியின் குடும்பத்தினர் எம்பிலிபிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.*


*குறித்த மாணவி பாடசாலைக்கு வராமல் பாடசாலை சீருடையில் எம்பிலிப்பிட்டியில் இருப்பதை கண்ட நபரொருவர் அவதானித்து பாடசாலைக்கு அறிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் குறித்த மாணவியின் வீட்டுக்கு அறிவித்ததையடுத்து, வீட்டார் இது குறித்து எம்பிலிப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். தான் புத்தகம் வாங்குவதற்காக கடையொன்றிற்கு சென்ற பின்னர், வேனில் அழைத்து சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக மாணவி தெரிவித்துள்ளார்.*

*குறித்த வான் பாணமுரே பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சாரதி பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பாணமுரே பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியம் கூடும்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துகொள்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**துலாம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வியாபாரத்தில் வேலையாட்களுடன் விவாதம் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**தனுசு**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உங்களைப் பற்றிய வதந்திகள் வரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

# மிக்ஜம் புயலால் தமிழகத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு

**சென்னை, டிசெ. 09**

**மிக்ஜம் புயலால் தமிழகத்தில் மட்டும் சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து மற்றும் வியாபார இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.**

மிக்ஜம் புயல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தாக்கியது. கனமழையால் சுமார் 2 இலட்சம் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

பல இடங்களில் தரை தளம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதால் மின் இலத்திரனியல் பொருட்கள் நாசமாகின. அத்துடன், மோட்டார் சைக்கிள், கார்கள் என பல வாகனங்களும் நீரில் மூழ்கின.

இதனிடையே பல தொழிலகங்கள் நீரில் மூழ்கியதால் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

சிறுகடைகள், நிறுவனங்களில் புகுந்த வெள்ளத்தால் சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள் அழிவடைந்தன. 8 ஆயிரம் ஹோட்டல்கள் நீரில் மூழ்கியதால் சுமார் 700 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.(ஐ)

# சலுகை கேட்ட பழனிசாமிக்கு உயர்நீதிமன்றம் கிடுக்கிப்பிடி!

சென்னை, டிசெ. 09

கொடநாடு கொலை, கொள்ளை விவகாரத்தில் தனக்கு எதிரான அவதூறு வழக்கில் நேரில் முற்பட்டு சாட்சியம் அளிக்க விலக்கு பெற்ற உத்தரவை எதிர்த்து, பத்திரிகையாளர் மத்தியூ சாமுவேல் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில் எதன் அடிப்படையில் விசாரணைக்கு முற்படுவதில் இருந்து விலக்கு கோருகிறீர்கள்? என எடப்பாடி பழனிசாமிக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி காணொலி வெளியிட்ட டில்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் மத்தியூ சாமுவேல், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு அ. தி. மு. க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 இலட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக, வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில்,உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிமன்றத்தில் நேரில் முற்பட்டு சாட்சியம் அளிக்க இயலாது. தமது வீட்டில் சாட்சியத்தை பதிவுசெய்ய வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமிக்க வேண்டும். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ள தனக்குள்ள பாதுகாப்பு வழிமுறைகள் காரணமாக, உயர் நீதிமன்ற வளாகத்துக்கு வரும் போது, மற்ற வழக்காடிகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும். இந்த சிக்கல்களை தவிர்ப்பதற்கவே வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமிக்க வேண்டும். மாஸ்டர் நீதிமன்றத்தில் முற்படுவதை வேண்டுமென்றே தவிர்க்கவில்லை. அனைத்து சட்ட நடைமுறைகளையும் பின்பற்ற தயாராக இருக்கிறேன். வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமென்ற இந்த மனுவை ஏற்காவிட்டால், அது தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நேரில் முற்பட்டு சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்ததோடு, இந்த நடைமுறையை அவரின் வீட்டில் இருந்தே மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையரை நியமித்தது. இந்த உத்தரவை எதிர்த்து மத்தியூ சாமுவேல் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் எடப்பாடி பழனிசாமி பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, எதன் அடிப்படையில் விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து விலக்கு கோருகிறீர்கள்? என கேள்வி எழுப்பினர். அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பில் முற்பட்ட மூத்த வழக்கறிஞர் எஸ். ஆர். ராஜகோபால், மனுதாரருக்கு காலில் ஏற்பட்டுள்ள காயம் மற்றும் பாதுகாப்பு காரணங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு விலக்கு கோரப்பட்டது என்றார்.

அதற்கு, உடல்நல காரணத்தை தவிர மற்ற காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம், என நீதிபதிகள் தெரிவித்தனர். இதுகுறித்து விரிவாக வாதிட அனுமதிக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், விசாரணையை வரும் டிசெ. 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# அரசை விமர்சிக்காமல் உதவும் தருணம் இது!

## கமல்ஹாசன் தெரிவிப்பு

சென்னை, டிசெ. 09

அரசாங்கத்தை குறை சொல்லிக் கொண்டிருப்பதைவிட களத்தில் இறங்கி வேலை செய்யவேண்டியது நம் கடமை என்று மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

மிக்ஜம் புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மக்கள் நீதி மய்யம் சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்தப் பொருட்களை நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனது இல்லத்திலிருந்து வாகனங்களில் அனுப்பி வைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

“எதிர்பார்த்ததை விட அதிக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு வந்ததெல்லாம் சிற்றிடர். இது பேரிடர். குறை சொல்லிக் கொண்டிருப்பதை விட இறங்கி வேலை செய்ய வேண்டியது நம் கடமை. கோவிட் காலத்தில் கூட என் வீட்டை கொரோனா நோயாளிகளின் சிகிச்சைக்காக கொடுக்க முன்வந்தேன். ஆனால், இது கொரோனா தொற்று பாதித்த வீடு என்று ஒட்டிச் சென்றுவிட்டார்கள். எனவே இடைஞ்சல்கள் எங்களுக்கு புதிதல்ல.

இந்தப் பேரிடர் காலகட்டத்தில் குறைகளை சுட்டிக் காட்டிக் கொண்டிருக்காமல் மக்களுக்கு உதவ வேண்டும். அரசை பிறகு விமர்சித்துக் கொள்ளலாம். அது செய்யவேண்டிய ஒரு விசயம். வல்லுநர்களுடன் அமர்ந்து இதுபோன்ற பேரிடர்களிலிருந்து தற்காத்து கொள்வதற்கான தீர்வுகளை நாம் ஆராய வேண்டும். இது கால நிலை மாறுபாடு என்று உலகம் முழுவதும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு நிகழ்வு. எனவே குறை சொல்லும் படலத்தை பிற்பாடு வைத்துக் கொண்டு, மக்களுக்கு உடனே செய்ய வேண்டியதை செய்ய வேண்டும்” என்றார்.

(ஐ)

# இலங்கைக்கு எதிராக தடை விதிப்பாரா டேவிட் கமரூன்?

## மனித உரிமை அமைப்புகள் கூட்டாக கேள்வி

லண்டன், டிசெ. 09

**இலங்கையில் சீனா முன்னெடுக்கும் கொழும்புதுறைமுகநகர திட்டத்திற்கு ஆதரவளித்த பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன் இலங்கைக்கு எதிராக தடைகளை விதிப்பாரா என சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இலங்கையை சேர்ந்த அமைப்புகளும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் கூட்டாக கேள்வி எழுப்பியுள்ளன.**

இலங்கையில் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தடைகளை விதிப்பதா என்ற உடனடி தீர்மானத்தை பிரிட்டனின் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமருன் எடுக்கவேண்டும் என எட்டு மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் சீனாவின் முதலீட்டில் சீன நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் சர்ச்சைக்குரிய கொழும்புதுறைமுக நகர திட்டத்தினை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக கமருன் ஈடுபடுத்தப்பட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த வேண்டுகோள் வெளியாகியுள்ளது.

மனித உரிமை அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் இலங்கையின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளான முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மிகச் சமீபத்தில் ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக தடைகள் குறித்த இரண்டு ஆவணங்களை கையளித்துள்ளது.

இரண்டு ஆவணங்களும் டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமை தினத்திற்கு முன் பாக முடிவுக்காக காத்திருக்கின்றன.

கடந்த வருடம் நவம்பரில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகளை தடுப்பது தொடர்பான உச்சிமாநாட்டில் மோதல் தொடர்பிலான பாலியல் வன்முறைகளுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் என குற்றம்சாட்டப்பட்ட தனிநபர்களுக்கு எதிரான தடைகளிற்கு முன்னுரிமை அளிப்பேன் என பிரிட்டன் உறுதியளித்திருந்தது.

மிகமோசமான தடுப்பு முகாமான ஜோசப் முகாமுக்கு பொறுப்பாக இருந்தமைக்காக சவேந்திர சில்வாவுக்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை ஏன் விதிக்கவேண்டும் என்பதற்கான வலுவான ஆதாரங்களை நாங்கள் முன்வைத்துள்ளோம் இந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என சர்வதே உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐ.நா. ஏற்படுத்திய விசாரணைக் குழுவில் ஜஸ்மின் சூகா இடம் பெற்றிருந்தார்.

பாலியல் வன்முறை சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பல தமிழர்கள் தற்போது பிரிட்டனில் புகலிடம் பெற்றுள்ளனர்.

பாலியல் வன்முறையை முடிவிற்கு கொண்டுவருவது அதற்கு காரணமானவர்களை பொறுப்புகூறச்செய்வது குறித்து கடந்த வருடம் பி.எஸ்.வி.ஐ. முயற்சியில் பிரிட்டன் வாக்குறுதியளித்துள்ளது காரணமாக இலங்கையில் பாலியல் வன்முறை சித்திரவதைகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எடுக்காதது ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது என வும் அவர் தெரிவித்துள்ளார். (அ)




# பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை உடன் நிறுத்துங்கள்!

## வவுனியாவில் நேற்று பேரணி

வவுனியா, டிசெ. 09

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்குமாறு வலியுறுத்தி வவுனியாவில் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் நேற்று காலை ஆரம்பமான குறித்த பேரணி கண்டி வீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து மாவட்ட செயலகம் வரை சென்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பெண்கள் "பெண்களுக் கெதிரான வன்முறை இல்லாது ஒழிக்கும் பொருட்டு நவம்பர் 25 முதல் டிசெம்பர் 10 வரையான 16 நாட்கள் செயல்வாத விழிப்புணர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக உலகில் அதிகமான வன்முறைகளுக்கு உள்ளாகும் தரப்பாக பெண்களே உள்ளனர். அவர்களுக்கான உதவிகள் கிடைக்கப்பெறாத நிலையில் வீட்டினுள்ளே முடங்கிக்கிடக்கும் நிலை தற்போது காணப்படுகின்றது.

எனவே வன்முறைகளை தடுத்து அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை கிடைக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது-என்றனர். (அ)

# 2,700 கிலோ பீடி இலைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 09

குருணாகல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 2,700 கிலோ பீடி இலைகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை ஒருவர் புத்தளம் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் விசேட அதிரடிப்படையினரால் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பீடி இலைகளும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

கைதானவர் நாகவில்லுவ பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவர் என்பதுடன் இவர் மேலதிக விசாரணைகளுக்காக குருணாகல் கலால் பிரிவினரிடம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரத்த பரிசோதனைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மூன்று நாட்களாக இரத்தப் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார நிபுணத்துவ சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமையால் நோயாளர்கள் பணம் செலுத்தி இரத்த பரிசோதனை அறிக்கைகளை தனியார் பரிசோதனை கூடங்களில் கொண்டு வர வேண்டியுள்ளதுடன் இரத்த பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பஸ்களில் துன்புறுத்தலைத் தடுக்க புதிய தொழில்நுட்பக் கருவி

கொழும்பு, டிசெ. 09

பஸ்களில் பெண்கள் மற்றும் சிறுமிகள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் நோக்கில் புதிய தொழில்நுட்ப கருவி பொருத்தப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதன்படி, பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள வோக்கி-டாக்கிரக கருவியின் மூலம் முறைகேடு குறித்து உரிய நேரத்தில் தெரிவிக்க முடியும் என விஜேரத்ன கூறினார்.

இவ்வாறு தெரிவிக்கப்படும் மின் முறைப்பாடு பஸ்ஸின் உரிமையாளர், சாலைப் பயணிகள் போக்குவரத்து ஆணையம் மற்றும் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு ஒரே நேரத்தில் தெரிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், தொடர்புடைய கருவி ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பஸ்ஸை கண்டுபிடித்து, துஷ்பிரயோகம் செய்பவரைக் கைது செய்யும் திறன் சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சில தூதுவர்கள் தொடர்பில் அமைச்சர் அலி சப்ரி விசனம்



கொழும்பு, டிசெ. 09

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தூதுவர்கள் விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர்களின் அதிகாரத்துக்கும் மேலாக செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு தொடர்பான பட்ஜெட் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிலர் நாட்டின் செயற்பாடுகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர்.

எனினும், சிலர் மத்தியில் எமது தேவை தொடர்பில், தெளிவின்மை காணப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக தூதரக சேவையினை எவ்வாறு வழமைக்கு கொண்டு வருவது தொடர்பில், கவனம் செலுத்தப்பட்டு வருகிறது-என்றார். (அ)

# முடங்கப்போகும் அஞ்சல் சேவை!

கொழும்பு, டிசெ. 09

ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்கம் நாளை மாலை 4 மணி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் மீண்டும் அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள அஞ்சல் காரியாலயங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஏனைய பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று பாராளுமன்ற சுற்றுவட்ட பகுதியில் அஞ்சல் தொழிற்சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் தமது கோரிக்கைகள் தொடர்பில், விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருடன் கலந்துரையாடியபோதிலும், எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என தெரிவித்து, அவர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (அ)

# மக்கள் பயணிக்கும் படகில் நெடுந்தீவுக்கு செல்லுங்கள்!

## அமைச்சர் பந்துலவிடம் கோரினார் சிறிதரன் எம்.பி

கொழும்பு, டிசெ. 09

**வடக்கு மாகாணம் நெடுந்தீவுக்கு வருகை தருவதாக போக்குவரத்து அமைச்சர் குறிப்பிடுவது முக்கியமானது. அவ்வாறு வருகை தரும் போது அவர் கடற்படையின் படகை பயன்படுத்தக்கூடாது. பொதுமக்கள் பயன்படுத்தும் படகை பயன்படுத்தவேண்டும். அதேபோல் நெடுந்தீவுக்கு சென்றதன் பின்னர் ஓட்டோவை பயன்படுத்தவேண்டும். அப்போது தான் உண்மைப் பிரச்னை அவருக்கு விளங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் எஸ்.சிறிதரன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன,

யாழ்ப்பாணம்,நெடுந்தீவில் உள்ள வீதிகளின் மொத்த நீளம் 14 கிலோமீற்றராக காணப்படுகிறது. காலை மாலை என்ற அடிப்படையில் இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இவர்கள் எதிர்நோக்கியுள்ள போக்குவரத்து அசௌகரியங்களுக்கு அடுத்த ஆண்டுக்குள் தீர்வு வழங்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார்.

இதன்போது கேள்வியெழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நெடுந்தீவு பிரதேசம் தனித்த தீவாக காணப்படுகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து சுமார் 16 கடல் மைல் தொலைதூரத்தில் இந்த தீவு உள்ளது.

தனியார் மற்றும் அரச பஸ் உள்ளடங்கலாக இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாக குறிப்பிடுவது தவறானது. இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஒரு பஸ் மாத்திரமே சேவையில் உள்ளது. அதுவும் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட பஸ். இந்த பஸ் பழுதடைந்தால் அன்றைய தினம் அப்பிரதேசத்தின் போக்குவரத்து சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையும்.

நெடுந்தீவு பகுதிக்கு ஒற்றைக் கதவு உள்ள ஒரு பஸ்ஸையாவது வழங்குங்கள் என்று பலமுறை வலியுறுத்தியும் இதுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை. அதேபோல் 14 கிலோமீற்றர் வீதியில் 3 கிலோமீற்றர் வீதிக்கு மாத்திரமே வரலாற்றில் முதல் தடவையாக கொங்றீட் போடப்பட்டுள்ளது-என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, நான் கல்வி அமைச்சராக பதவி வகித்தபோது நெடுந்தீவுக்கு சென்றேன். ஏனைய மாவட்டங்களின் கல்வி நிலை நெடுந்தீவுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக ' மஹிந்தோதய திட்டம்' நெடுந்தீவில் அமுல்படுத்தப்பட்டது.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற பஸ்களில் 15 பஸ்கள் யாழ்ப்பாணம் டிப்போக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆகவே யாழ்ப்பாணம் அபிவிருத்தி குழுக் கூட்டத்துக்கு வருகை தருவேன். நேரடிகள ஆய்வில் ஈடுபடுவேன்-என்றார்.

மீண்டும் கேள்வியெழுப்பிய எஸ்.சிறிதரன், யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு படகு சேவை பலவீனமான நிலையில் உள்ளது. வடதாரகை படகுச் சேவை கடந்த 4 மாத காலமாக சேவையில் இல்லை. நெடுந்தாரகை படகு சேவை பலவீனமான தன்மையில் உள்ளது. குமுதினி படகுச் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே நெடுந்தீவுக்கான படகுச் சேவை ஆபத்தான நிலையில் உள்ளது. குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு பாதுகாப்பான படகுச் சேவையை நேர அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு நாளைக்கு 6 முறை படகுச் சேவையை முன்னெடுக்கவேண்டும்.

நெடுந்தீவில் சுமார் 5000 பேர் வாழ்கிறார்கள். போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு பிரச்னைகளால் இப்பிரதேச மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். நான் குறிப்பிடுவது பொய் என்றால் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசீலனுடன் தொடர்புக் கொண்டு பேசுங்கள்-என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டது பொய் என்று நான் குறிப்பிடவில்லை. வெகுவிரைவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவேன். நெடுந்தீவுக்கு செல்வேன் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் என்னுடன் வருகை தரலாம் -என்றார்.

இதன்போது எழுந்த சிறிதரன், நெடுந்தீவுக்கு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டது முக்கியமானது. அவர் கடற்படையின் படகில் நெடுந்தீவுக்கு செல்லக்கூடாது. அப்பிரதேச மக்கள் பயன்படுத்தும் படகில் தான் அமைச்சர் செல்லவேண்டும். அதேபோல் நெடுந்தீவுக்கு சென்ற பின்னர் முச்சக்கர வண்டி, சிறிய உழவு இயந்திரத்தில் பயணம் செய்ய வேண்டும் -என்றார். (அ)






# வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் சர்வதேச மண் தின நிகழ்வு முன்னெடுப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 09

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவினரால் சர்வதேச மண் தினம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவு முன்னெடுத்த சர்வதேச மண் தின நிகழ்வு திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெற்ற மண் தின நிகழ்வின் போது விவசாய அமைச்சினால் அறுவடை சஞ்சிகை வெளியிடப்பட்டதோடு சர்வதேச மண் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

சிறப்பு நிகழ்வாக விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து வழங்கிய "மண் தேவி" விழிப்புணர்வு நாடகம் மேடையேற்றப்பட்டது.

மண் தின நிகழ்வில் விருந்தினர்களாக, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் சீ.வசந்தரூபா, உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் கலாநிதி இ.அன்ரனிராஜன் உள்ளிட்டோரும், விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# பளையில் நடந்த பஸ் விபத்தில் இ.போ.ச பணியாளர் படுகாயம்!

கிளிநொச்சி, டிசெ. 09

கிளிநொச்சி, பளை பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி பயணியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

பளை பஸ் நிலையத்துக்கு அண்மையில் நேற்று காலை இந்த சம்பவம் நடந்தது.

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில், கிளிநொச்சியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர் ஒருவர் பயணித்துள்ளார். அவர் கடமைக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பளையில் பயணிகள் இறங்குவதற்கு வசதியாக அவரும் கீழே இறங்கியுள்ளார். அவர் வேறு பக்கம் திரும்பியபோது, பஸ் புறப்பட்ட சமயத்தில் அவது இடது கால் பாதத்தின் மேலாக பஸ் சக்கரம் ஏறியுள்ளது.

இதனால் பாதம் பாதிக்கப்பட்ட நிலையில் அவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உக்ரைன் இராணுவத்தில் இணைய இலங்கைப் படையினர் மிக ஆர்வம்

## ஏற்கனவே 20 இற்கும் மேற்பட்டோர் இணைவு

கொழும்பு, டிசெ. 09

இலங்கை இராணுவத்தில் இருந்து வெளியேறிய சுமார் 70 முன்னாள் இராணுவ வீரர்கள், உக்ரைன் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்திலிருந்து சட்டரீதியாக விலகியவர்களே இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

உக்ரைன் படையில் இணைந்து கொள்ளும் வீரர்களுக்கு 1 மில்லியன் ரூபா முதல் 12 மில்லியன் ரூபா வரையில் மாதாந்த சம்பளமாக வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே உக்ரைன் இராணுவத்தில் 20 இற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் இணைந்துள்ளனர். இந்நிலையில் இலங்கை வீரர்கள் பலர் உக்ரைன் இராணுவத்தில் இணைய விண்ணப்பித்துள்ளனர்.

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் படையினர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை தேடிச் செல்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்குக்கு அனுப்பப்பட்ட தரமற்ற சீனி!

யாழ்ப்பாணம், டிசெ. 09

வடக்கு மாகாணத்துக்கு 80 ஆயிரம் கிலோ சீனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில் 30 ஆயிரம் கிலோ சீனி திரும்பி அனுப்பப்பட்டமை தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

320 ரூபாவுக்கு சீனி விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாண மக்களுக்கு 100 மெற்றிக் தொன் சீனியை வழங்க அமைச்சர் கடற்தொழில் அமைச்சரிடம் உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில் கிடைக்கும் சீனியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 280 ரூபாவுக்கு மக்களுக்கு வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் சீனியின் தாராதரம் பார்வையிடப்பட்ட பின்னர் வடக்குக்கு குறித்த நிறுவனத்தால் 80 ஆயிரம் கிலோ சீனி அனுப்பி வைக்கப்பட்டது. அதில் தரமற்ற சீனியாக அடையாளம் காணப்பட்ட 30 ஆயிரம் கிலோ சீனி அந்த நிறுவனத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியபோது,

பொதுமக்களுக்கு தரமான பொருட்கள் மாத்திரமே வழங்கப்படும். கூட்டுறவுச் சங்கத்தினர் தரமற்ற சீனியை திருப்பி அனுப்பியது நல்ல விடயமாகும்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவத்துடன் பேசப்பட்டுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட சீனிக்கு பதிலாக தரமான சீனி வழங்கப்படும். தரமற்ற பொருட்களை அனுப்பும் செயற்பாட்டுக்கு இடமளிக்க முடியாது. மக்களுக்கு தரமான சீனி கிடைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.



இவ்விடயம் தொடர்பின் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானம் செலுத்துகிறேன். மேலும் ஒரு தொகை சீனி பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பேசி வருகிறேன்-என்றார். (அ)

# கோட்டாவின் வழியில் பயணிக்கிறார் ரணில்

## நிரோஷன் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 09

**தேர்தல் வாக்குகளுக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இஸ்லாமிய நாடுகளை பகைத்துக் கொண்டார் அதன் தாக்கம் ஜெனிவா விவகாரத்தில் செல்வாக்கு செலுத்தியது. தற்போதைய ஜனாதிபதியும் அவ்வழியில் தான் செல்கிறார். ஜெனிவாவுக்கு ஒன்றை குறிப்பிட்டு விட்டு, உள்ளக மட்டத்தில் அதற்கு எதிர்மறையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சர்வதேச சமூகம் மூடர்களல்லர், வெளிவிவகாரத்துறையில் எடுக்கும் தவறான தீர்மானங்கள் ஒட்டுமொத்த மக்களுக்கும் தாக்கம் செலுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கு 19.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா விவகாரம்,இந்திய பெருங்கடலுடனான கப்பல் போக்குவரத்து,வெளிநாட்டு இராஜந்திர உறவுகள், வெளிநாட்டு அந்நிய செலாவணி, சர்வதேச வர்த்தகம் மற்றும் வியாபாரம் உள்ளிட்ட செயற்பாடுகளில் வெளிவிவகாரத்துறை அமைச்சு முக்கிய பங்கு வகிக்கிறது.

2022 ஆம் ஆண்டு வெளிவிவகாரத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வில் 12 பில்லியன் ரூபா தொடர்பில் முறையான கணக்காய்வு ஏதும் இடம்பெறவில்லை.

வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பது சந்தேகத்துக்குரியது.

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் சாலிய விக்கிரமசூரிய மீது 3 இலட்சத்து 3227 அமெரிக்க டொலர் நிதி மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவருக்கு அமெரிக்க வொஷிங்டன் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவரை பாதுகாப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்தன.



ஆனால் இவருக்கு எதிராக இலங்கையில் முறையாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இலங்கையின் அரச தலைவர்கள் மோசடி செய்த நிதி சாலிய விக்கிரமசூரிய ஊடாக வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள விவகாரம் தொடர்பில் அமெரிக்காவில் எப்.பி.ஐ. நடவடிக்கை எடுத்தபோதும் அதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

அதேபோல் ராஜபக்ஷர்களின் குடும்ப உறவினரின் நிதி மோசடி தொடர்பில் பென்டோரா வெளியிட்ட அறிக்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய விசாரணைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு விசேட குழுவை நியமித்தார்.மோசடி செய்யப்பட்டு லண்டன், அவுஸ்ரேலியா, டுபாய் ஆகிய நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதிக்கு நேர்ந்தது என்ன? இந்த கேள்விகளுக்கு வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரியிடம் பதில் எதிர்பார்க்க முடியாது.ஏனெனில் அவர் தான் ராஜபக்ஷர்களின் சட்டத்தரணியாக பல வழக்குகளில் முன்னிலையானார்.

அதேபோல் மிக் விமான கொள்வனவில் 6.8 மில்லியன் டொலர் நிதி மோசடி குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்பட்ட உதயங்க வீரதுங்கவை ராஜபக்ஷர்கள் ரஷ்யாவுக்கான தூதுவராக நியமித்தார்கள்.இவர் மீது நிதி மோசடியுடன் தற்போது ஆயுத வியாபார குற்றச்சாட்டும் உக்ரைனில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி மோசடியுடன் தொடர்புடையவர்களை வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமித்ததால் இன்று இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன அண்மையில் இந்தியாவின் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் ' வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என குறிப்பிட்டுள்ளதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான இயந்திரங்களை கொண்டு மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.எமது நாட்டின் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி வழங்கினால் நாட்டின் மீன்வளம் முழுமையாக இல்லாதொழியும்.இலங்கைக்கு கச்சத்தீவை வழங்கியது தவறு என்று இந்திய பிரதமர் நரேந்திரமோடி பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே மீன்பிடி விவகாரத்தில் இந்த அரசாங்கம் இந்தியாவின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுவது சந்தேகத்துக்குரியது. ஆகவே இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)



# பெருந்தோட்ட மக்களுக்காக நேற்று மௌனப் போராட்டம்

கொழும்பு, டிசெ. 09

பிரித்தானிய தூதரகத்துக்கு முன்பாக மௌனப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பெருந்தோட்ட மக்களின் குரல் அமைப்பு மற்றும் பல சிவில் அமைப்புக்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி இந்த மௌனப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பெருந்தோட்ட மக்களின் குரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கருத்து தெரிவிக்கையில்,

இருநூறு வருடங்களாக இந்நாட்டில் வாழும் பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டில் புதிய அல்லது நவீன அடிமைத்தனத்தில் வாழ்கின்றனர்.

அவர்களுக்கு அடையாளமும் இல்லை, காணி உரிமையும் இல்லை.

இதனால் இவர்களுக்கு ஆதரவு வழங்குமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். மேலும், பிரித்தானிய அலுவலகத்திற்கு முன்பாக இந்த மௌனப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்-என்றார். (அ)

# சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 09

2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயமானது நிகழ்வு ஒன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளது.

குறித்த நிகழ்வானது எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 09.45 மணியில் இருந்து நண்பகல் 12.00 மணி வரை யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

# ஹரக்கட்டா, குடு சலிந்துவுக்கு 90 நாள் தடுப்புக்காவல் உத்தரவு

கொழும்பு, டிசெ. 09

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள நந்துன் சிந்தக அல்லது ஹரக்கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரை மேலும் 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கே பாதுகாப்பு அமைச்சு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இதனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று வெள்ளிக்கிழமை கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

இதேவேளை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'ஹரக்கட்டா' என்ற நந்துன் சிந்தக விக்கிரமரத்னவை உடனடியாக உரிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 6ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

ஹரக்கட்டா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது. (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் நடத்துவதற்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 09

குறுகிய காலத்துக்குள் ராஜபக்சக்களுக்கு தீர்ப்பளித்த நீதித்துறை, சாட்சியங்களோடு உள்ள எங்களை கண்டுக்கொள்ளவில்லை. நீதியை வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி நேற்று ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போது மனித உரிமை தினமாக நாளை போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 வருடங்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி வருவதுடன், நீதி கேட்டு போராடி வருகின்றோம்.

எமது போராட்டத்திற்கு ஆண்டுகள் பல கடந்தாலும் நீதி இன்றுவரை கிடைக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கென நிதிகள் ஒதுக்கப்படுவதாக அறிகிறோம். நாங்கள் நிதிக்காக போராடவில்லை. நீதிக்காகவே போராடுகின்றோம்.

இந்த நிலையில், சில ஊடகங்களிலும், சமூகவலைத்தளங்களிலும் எம்மால் சொல்லப்படாத சில விடயங்களை வெளியிடுகின்றனர். நிதியை எதிர்பார்த்து நிற்பதுபோல் தெரிவிக்கின்றனர். நாங்கள் நிதிக்காக போராடவில்லை. எமக்கு நீதியே தேவை.

இலங்கை அரசு நீதி தராது என்பதாலேயே நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை வேண்டுகிறோம். எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். அன்று நாங்கள் வடக்கு கிழக்கில் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளோம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்களே காரணம் என இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மிக குறுகிய 2 ஆண்டுகளிற்குள் நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பளித்துள்ளது.

இனப்படுகொலை செய்யப்பட்டமைக்கும், கொடூர யுத்தத்தை முன்னெடுத்தார்கள் என்பதற்கும், காணாமல் ஆக்கச் செய்தார்கள் என்பதற்குமான பல சாட்சிகள் ஆதாரங்களுடன் நாங்கள் உள்ள போதிலும் எமக்கு நீதி வழங்க எந்த நீதிமன்றமும் முன்வரவில்லை.

இந்த நிலையிலேயே எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று மாபெரும் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த போராட்டம் வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சியில் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள எமது அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெறும்.

குறித்த போராட்டத்திற்கு வர்த்தகர்கள், சிவில் அமைப்புக்கள் என அனைவரும் ஒத்துழைத்து எம்முடைய போராட்டத்துக்கு வலு சேர்க்க வேண்டும்" எனவும் தெரிவித்தார்.(அ)

# பூசாரியின் தாக்குதலில் அண்ணன் உயிரிழப்பு!

**தங்கை படுகாயம் மட்டக்களப்பில் சம்பவம்**

மட்டக்களப்பு, டிசெ. 09

**பூசாரியொருவர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு, மாங்கேணிப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

குறித்த பகுதியில் பேய், பிசாசு, ஆவிகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் ஆலயமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினமான கடந்த 6 ஆம் திகதி குறித்த பூசாரியிடம் அண்ணன், தங்கை என இருவர் சென்றுள்ள நிலையில் குறித்த பூசாரி இருவரையும் தாக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் படுகாயமடைந்த அண்ணன் உயிரிழந்துள்ள நிலையில் தங்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை குறித்த பூசாரி தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்த நபருக்கும் பூசாரியின் மனைவிக்கும் இடையே தவறான தொடர்பு இருந்ததை அறிந்தே குறித்த பூசாரி தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு புனானை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதானவர் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 300 மில்லிலீற்றர் அரச சாராயத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்தமைக்காக 50ஆயிரம் ரூபா தண்டம்!

அம்பாறை, டிசெ. 09

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தங்கவேலாயுதபுரத்தில் 300 மில்லி லீற்றர் அரச சாராயத்தினை சட்டவிரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் கல்முனை மதுவரி திணைக்கள பொறுப்பு அதிகாரி பிரசாந்த்தினால் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தினை ஏற்றுக் கொண்டதற்கு அமைவாக 50,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்த வேண்டும் தவறினால் ஆறு மாதம் கடூழிய சிறைத்தண்டனை என்று அக்கரைப்பற்று மேலதிக நீதிவான் தெஸிமா கஜீவன் கட்டளை பிறப்பித்தார். (அ)

# போதைப்பொருட்களை விநியோகித்த ஆலா கைது

அம்பாறை, டிசெ. 09

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போதைப்பொருட்களை விநியோகித்து ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

அம்பாறை - பெரியநீலாவணை பொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற விசேட தகவல் ஒன்றிக்கமைய மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, ஆலா என அழைக்கப்படும் 39 வயதுடைய முஹம்மது இஸ்மாயில் அஸ்மீர் என்ற நபரை 100 கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆலாவை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதீவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஒளிவிழா






அம்பாறை, டிசெ. 09

மண்முனை வடக்குப் பிரதேச நலன்புரிச் சங்கம் நடத்திய ஒளிவிழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அருட்தந்தை அன்னதாஸ் அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் அருட்பணி ராஜரெட்ணம் அடிகளார் பாலன் யேசுவின் பிறப்புத் தொடர்பில் சிறப்புரையாற்றினார். அத்தோடு நத்தார் பாப்பா வருகை தந்து நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு பரிசில்களை வழங்கினார்.

இதன்போது மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மீண்டும் சதுரங்கத்தில் சாதித்தது ஸாஹிரா



அம்பாறை, டிசெ. 09

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை 15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினையும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் 2ஆம் இடத்தினையும் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளத்தின் ஏற்பாட்டில் கடந்த 2ஆம், 03ஆம் திகதிகளில் கந்தளாய் மத்திய கல்லூரியில் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க போட்டி இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டே அவர்கள் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

மேலும், அதிக போட்டிகளில் வெற்றி பெற்று 17 வயதுப் பிரிவில் ஐ.எம். சம்லி சாஹி, எம். இசட். எம்.சானிப், ஏ.எஸ். எம். மிஜ்வாத் மற்றும் 15 வயதுப் பிரிவில் ஐ.எம்.எம் ஆக்கில் கான், எம்.ஜெ.ஐ. சஹ்மி, ஏ.ஏ. பர்வீஸ் ஆகியோரும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர்.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் மாணவர்களை அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர் சுஹ்தான் ஆகியோரையும் அதிபர் எம்.ஐ. ஜாபீர் பாராட்டி வாழ்த்தியுள்ளார். (அ)

# கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக சக்கீலா இஸ்ஸதீன்



அம்பாறை, டிசெ. 09

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சாய்ந்தமருதைச் சேர்ந்த டாக்டர் சக்கீலா இஸ்ஸதீன் கடமையேற்க உள்ளார்.

இவர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்க உள்ள முதலாவது பெண் அதிகாரியாவார். மருத்துவ துறையில் 35 வருட சேவைக் காலத்தை கொண்ட இவர் சாய்ந்தமருதின் முதலாவது பெண் மருத்துவ கலாநிதியும், மருத்துவ நிர்வாகத்துறையில் முதலாவது முஸ்லிம் பெண் நிர்வாக உத்தியோகத்தருமாகும்.

சாய்ந்தமருது முன்னாள் மரண விசாரணை அதிகாரி மர்ஹூம் ராசிக் காரியப்பரின் புதல்வியும், ஓய்வுபெற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஏ. இஸ்ஸதீனின் மனைவியும் ஆவார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் தள வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றி நிறுவனம் சார்பான போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மற்றும் மாகாணத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமை புரிந்த காலத்தில் சுகாதார துறையில் அதிகளவிலான விருதுகளை பெறுவதற்கு காரணமாக அமைந்த இவர் கல்முனை கார்மல் பாத்திமாக் கல்லூரியின் பழைய மாணவியுமாவார். (அ)

# உயிருடன் கரையொதுங்கிய சுறா



காரைதீவு, டிசெ. 09

காரைதீவு கடற்பரப்பில் உயிருடன் கரையொதுங்கிய பாரிய சுறாமீன் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீண்டும் கடலின் ஆழமான பகுதிக்கு அனுப்பப்பட்டது.

காரைதீவு கடல்பரப்பில் பாரிய சுறா மீனொன்று கரையொதுங்கியது.

மீனவர்கள் காரைதீவு கடற்படை முகாமிற்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த சுறாமீன் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீண்டும் கடலின் ஆழமான பகுதிக்கு அனுப்பப்பட்டது. (அ)

# ஹமாஸ் தலைவரை நிச்சயம் பிடிப்போம்

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு உறுதி

**டெல் அவிவ், டிசெ. 09**

**ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வாரைப் பிடிக்கப் போவது உறுதி என இஸ்ரேல் பிரதமர் தெரிவித்தார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கி நேற்று முன் தினம் 2 மாதங்கள் முடிவடைந்தது. இந்த போரில் இருதரப்பிலும் சுமார் 18 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஹமாஸ் தலைவர் இருப்பதாக நம்பப்படும் காசாவின் தெற்குப்பகுதிகளைச் சுற்றி இஸ்ரேலின் படைவளைத்து விட்டதாகத் தெரிவித்த பெஞ்சமின், தற்போது அவர்கள் சின்வாரின் வீட்டைச் சுற்றி வளைத்திருப்பதாகவும் கூறினார்.

அங்கிருந்து அவர் எளிதாகத் தப்பி ஓடிவிடுவார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் விரைவில் அவரைப் பிடிக்கப் போவது உறுதி என அவர் சூளுரைத்தார். (அ)



# கனடாவில் பெரும் வேலை நிறுத்தம்!

## சுமார் 420,000 அரச ஊழியர்கள் பங்கேற்பு

மொன்றியல், டிசெ. 09

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் நேற்று பாரிய அளவிலான வேலை நிறுத்தப்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அரச ஊழியர்கள் நேற்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் இந்த வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த போராட்டம் கியூபெக் மாகாண பொதுத்துறை ஊழியர்கள் ஒன்றியத்தினால் சுமார் 420,000 பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் மாகாண அரசாங்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் முரண்பாட்டு நிலை நீடித்து வந்தது.

மாகாண அரசாங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு வீதத்தை பொதுத்துறை தொழிற்சங்கங்கள் ஏற்க மறுத்தன.

16.7வீத அளவில் சம்பள அதிகரிப்பை ஐந்தாண்டு காலப் பகுதியில் மேற்கொள்ள முடியும் என மாகாண அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் இந்த யோசனைக்கு பொதுத்துறை ஊழியர்கள் ஆதரவினை வழங்கவில்லை.

பணவீக்க அளவிற்கு ஏற்ற வகையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என பொதுத்துறை சார் ஊழியர்கள் அரசாங்கத்திடம் கோரி வருகின்றனர்.

தமது கோரிக்கையை ஏற்கப்படாத பட்சத்தில் போராட்டத்தை முன்னெடுப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மோதலை முடிவுக்குக் கொண்டு வர அனைவரும் ஒன்றிணையவேண்டும்

## ரஷ்ய ஜனாதிபதி கோரிக்கை



மொஸ்கோ, டிசெ. 09

இஸ்ரேல்-ஹமாஸ் மோதலையும், யுக்ரேன் ரஷ்யா மோதலையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் நேற்று இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் - இஸ்ரேல் தாக்குதல் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், உயிரிழந்த பொதுமக்களுக்கு ஈரான் ஜனாதிபதி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடனான பேச்சுவார்த்தைக்கு முன்னர் ரஷ்ய ஜனாதிபதி சவுதி அரேபிய இளவரசர் மொஹமட் பின் சல்மானையும் சந்தித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்!

ஜெருசலேம், டிசெ. 09

ஹமாஸ் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதலில் தெற்கு காஸாவின் ராஃபா நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு காஸாவிலுள்ள ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் கடுமையாக தாக்குதல் நடத்தியது.

தெற்கு காஸாவின் இரண்டாவது பெரிய நகரமான கான் யூனிசின் முக்கியப் பகுதியில் இஸ்ரேலிய ராணுவம், ஆயுதம் ஏந்திய படையினர், கவச வாகனங்கள் ஆகியவை நுழைந்துள்ளதால் அங்கு இடம்பெயர்ந்துள்ள குடிமக்கள் மீண்டும் வேறு இடங்களுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய ராணுவம் கான் யூனிஸ் நகருக்குள் நுழைவதைத் தடுக்க தாங்கள் போராடி வருவதாக ஹமாஸ் அமைப்பும் மற்றும் ஜிஹாத்தும் அமைப்பும் தெரிவித்தது.



இந்நிலையில் நாங்கள் பேரழிவிற்கு ஆளாகியுள்ளோம், மனதளவில் அதிகமாகப் பாதிக்கப்பட்டு உள்ளோம். எங்களுக்கு ஒரு தீர்வை யாராவது கண்டுபிடிக்க வேண்டும். அப்போது தான் இந்த சூழ்நிலையிலிருந்து நாங்கள் வெளியேற முடியும் என இஸ்ரேலின் தாக்குதலில் இருந்து தப்பிய மக்கள் தெரிவித்தனர்.

மேலும், ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரின் வீட்டை இஸ்ரேலிய ராணுவம் நெருங்கிவிட்டதாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நடுவானில் தீப்பிடித்த ரஷ்ய விமானம்

மொஸ்கோ, டிசெ. 09

ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று நடுவானில் தீப்பிடித்து எரிந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மொஸ்கோவிற்கு கிழக்கே 5,600 கிமீ தொலைவில் உள்ள புரியாட்டியா பகுதியில் உள்ள உலான்-உடே விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் இந்த விமானம் வானில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

ரி.யு-204 என்ற விமானத்தின் இயந்திரம் வெடித்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. எனினும் விமானத்தை அவசரமாக தரையிறக்கத்தில் விமானிகள் வெற்றி பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மேலிருந்து ஒரு சக்தி வாய்ந்த வெடிச்சத்தம் வருவதை கேட்டேன். முதலில், அது பட்டாசு என்று நினைத்தேன், ஆனால் ஒலி மிகவும் விசித்திரமாக இருந்தது.

இது மிகவும் பயமாகவும் இருந்தது," என்று சேம்பவத்தை நேரில் கண்ட பெண் கூறியதாக பிரித்தானியாவின் டெய்லி எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த விமானம் சீனாவை நோக்கி சென்றதாக கூறப்படுகிறது. உலான்-உடேயில் உள்ள பைக்கால் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம், சீனாவின் ஜாங்சூ நகரை நோக்கிச் சென்றபோது பற்றியெரிந்துள்ளது.

இந்த சம்பவத்தால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. விமானத்தில் ஐந்து பேர் இருந்துள்ளனர். இந்த சம்பவம் தற்போது கிழக்கு சைபீரிய போக்குவரத்து அலுவலகத்தால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தி குறித்த விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமீப காலமாக ரஷ்யா சந்தித்த வான் பாதுகாப்பு பிரச்னைகள் காரணமாக சர்வதேச சிவில் ஏவியேஷன் அமைப்பின் 'சிவப்பு' விசாரணைக்கு உட்பட்டுள்ளது.



இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், ரஷ்ய விமான நிறுவனங்களால் இயக்கப்படும் சிவில் விமானங்கள் சம்பந்தப்பட்ட ரஷ்யாவில் 120 விமான விபத்துகள் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறிய அரசு

## பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 09

**புதிய சட்டம் உருவாக்கப்படும் வரை பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தப் போவதில்லை என சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறி விட்டதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறி, தமக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் வாக்குறுதியை மீறி விட்டு புதிய வாக்குறுதிகளை வழங்கினால் அதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாது என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்படுகிறோம் என்று



பேச்சளவில் குறிப்பிடுவதால் மாத்திரம் முன்னேற்றமடைய முடியாது என்றும் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிடும் சூழலை நல்லாட்சி அரசாங்கமே உருவாக்கியது என்றும் குற்றம்சாட்டியுள்ளார். (அ)

# பலஸ்தீன இனப்படுகொலையை உடனே நிறுத்த ஜனாதிபதி வலியுறுத்தவேண்டும்

## எதிர்க்கட்சி சபையில் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

உக்ரைன் விவகாரத்தில் உடனடியாகப் பதிலளித்ததை போன்று பலஸ்தீன விவகாரத்திலும் வெளிப்படையான மற்றும் தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இனப்படுகொலையை உடனடியாக நிறுத்தவும், நிபந்தனையற்ற போர்நிறுத்தத்துக்கு உடனடியாக செல்லவேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இரண்டு மாதங்களாக இஸ்ரேலிய விமானப்படை பாலஸ்



தீனத்தில் குண்டுவீசி வருவதாகவும், வடக்கில் உள்ள பலஸ்தீனியர்கள் தங்கள் சொந்த கிராமங்களையும் குடியிருப்புகளையும் விட்டு தெற்கே செல்வதாகவும் குறிப்பிட்டார்.

இதேநேரம் இஸ்ரேலின் கொடூரமான தாக்குதலில் அனைத்து பாடசாலைகள், மருத்துவமனைகள், குடியிருப்புகள், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்றும் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் கூறினார். (அ)

# மூத்த பேராசிரியர் யோகராசா காலமானார்!



கொழும்பு, டிசெ. 09

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பேராசிரியரான செ.யோகராசா நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

வடமராட்சி, கரணவாய் கிராமத்தில் பிறந்த இவர் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில், குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவராவார்.

கடந்த 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், மொழித்துறை விரிவுரையாளராக இணைந்த இவர், 2009 இல் பேராசிரியராக நியமனம் பெற்று 2014 இல் 23 வருட பல்கலைக்கழக பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

அதுமட்டுமல்லாது இது வரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்பு நூல்களை அவர் படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

எல்லைத் தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களுக்கும், எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளது.

மூன்று படகுகளில் வந்த 13 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, நேற்று முன்தினம் நீரியல் வளத் திணைக்களத்துக்கு கொண்டு வரப்பட்டனர்.

பின்னர் அவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது, எதிர்வரும் 21ஆம் திகதிவரை 13 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி யாழில்!





யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தினால் நடத்தப்படும் யாழ்.சர்வதேச சதுரங்க போட்டி 2023 நேற்றுக் காலை ஆரம்பமானது.

குறித்த போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செல்வா பலஸில் நடைபெறும் போட்டியின் ஆரம்ப நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, இந்திய துணைத் தூதராக அதிகாரி ஸ்ரீராம் மகேஷ், இலங்கை சதுரங்கக் கழகத்தின் தலைவர் லக்ஸ்மன்



விஜேசூரிய, ஞானம் பவுண்டேசனின் உப தலைவர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

800 இற்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்து கொண்டுள்ள குறித்த போட்டியில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# 200 இலங்கையர் டுபாயில் நிர்க்கதி!

கொழும்பு, டிசெ. 09

வாகனச் சாரதி தொழிலுக்கு தகுதியில்லாத சிலர், வாடகை சிற்றூந்து நிறுவனமொன்றில் சாரதிகளாக இணையும் வகையில் மோசடியான முறையில் டுபாய்க்குச் சென்று அங்கு நிர்க்கதியாகியுள்ளனர்.

அங்கு வாகன சாரதிப் பரீட்சையில் சித்தியடைய முடியாமல் அவர்கள் பிரச்னைகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இந்தநிலையில், அவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

200 இலங்கையர்கள் இந்த மோசடி முறையின்கீழ் டுபாய் சென்றுள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இவர்களில் சிலர் தேவையான திறன்கள் இல்லாமல் அங்கு சென்றுள்ளனர். இன்னும் சிலர் சாரதி தேர்வில் தேவையான பயிற்சிகளை பெற்றிருந்தும் டுபாயில் தோல்வியடைந்துள்ளனர்.

அதேநேரம் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களும் திரும்பி வர விரும்புகிறார்கள். அவர்களை



மீள அழைத்து வர திட்டமிட்டுள்ளோம் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# தகன மேடையில் இருந்த இரும்பு தூண்கள் திருட்டு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழில் இந்து மயானம் ஒன்றின் தகன மேடையில் இருந்த இரும்பு தூண்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வட்டுக்கோட்டை வழுக்கையாறு, இந்து மயானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இரும்புத் தூண்கள் இல்லாமையினால் சடலங்களை எரியூட்டுவதில் மிகுந்த சிரமம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் மயானத்தில் பொருத்தியிருந்த மின்குமிழ்களையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மயானத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வடக்கு....

நடவடிக்கை எடுக்கவேண்டும் என சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

இதேநேரம் இந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்துக்குள் வடக்கு - கிழக்கில் காணப்படும் பிரச்னைகள் தீர்க்கப்படும் என கடந்த வருடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் ஏனைய பகுதி வாழும் மக்களும், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## இலங்கை....

நடைபெற்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வரையறுக்கப்பட்டளவில் அனுமதிப்பத்திரங்களை இந்திய மீனவர்களுக்கு வழங்குமாறும், அதற்கான கொடுப்பனவை செலுத்துவதாகவும் யோசனையொன்றை முன்வைத்தார். எனினும், இந்த யோசனை தொடர்பில் நாம் இதுவரையில் எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை.

ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாது, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கக்கூடாது என்பது எமது நிலைப்பாடாகும். ஆனால், இந்திய மீனவர்களுக்கு சற்று இடமளிக்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாகவுள்ளது.

அனைவருக்கும் அனுமதி வழங்காவிட்டாலும் குறிப்பிட்ட சிலருக்கு அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் அனுமதியை வழங்குமாறும் இதனால் பாதிக்கப்படும் இலங்கை மீனவர்களுக்கு இந்தியாவால் வழங்கப்படும் கொடுப்பனவுகளை கொண்டு நஷ்டஈட்டை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. இந்த யோசனை தொடர்பில் எவ்வித உடன்படிக்கையும் எட்டப்படவில்லை - என்றார்.

## உண்மை...

மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உண் மையை உறுதி செய்யும் வகையில் நல்லி ணக்கம், இழப் பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்கு தேவையான வசதிகளை வழங்குவதே இதன் நோக்கம் என குறிப்பிடப்பட் டுள்ளது.

மேலும், இலங்கை மக்களிடையே தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவம், சகிப்புத்தன்மை, பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டவும் வலுப்படுத்தவும் இந்த ஆணைக்குழு செயற்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உட்பட இலங்கையின் யுத்தத்துக்குப் பின்னராக நல்லிணக்க முயற்சிகளில் கடந்த பல ஆணைக்குழுக்கள் வழங்கிய பரிந்துரைகளை மீளாய்வு செய்யவும், பரிசீலிக்கவும் நடைமுறைப்படுத்தவும் இந்த ஆணைக்குழு செயற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தால் 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான ஆலோசனை செயலணியின் ஆய்வுகள் தொடர்பிலும் இந்த ஆணைக்குழு கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச சுயாதீன ஆணைக்குழு எந்த வித அரசியல் தலையீடு இன்றியும் பக்க சார்பற்றதாகவும் செயல்படுவதை உறுதிப்படுத்துவதாக அரசாங்கம் கூறியுள்ளது.

உத்தேச புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தை ஸ்தாபிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## லஞ்சீற்றுக்கு..

பாவனையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. அத்துடன், மனிதர்களில் புற்று நோய் பரவவும் இது வழிவகுக்கிறது என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, மாற்று உபயோகப் பொருட்களை பயன்படுத்துவதற்கு 6 மாத கால அவகாசம் வழங்கி லஞ்ச் சீற்றை தடை செய்யுமாறும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தோட்டத்...

பணிப்புரை வழங்கினார்.

பெருந்தோட்ட நிறுவ னங்களின் பிரதானிகளு டன் நேற்று ஜனாதிபதி பணிமனையில் நடந்த கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணித்தார்.

வரவு - செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தின் பிரகாரம் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தமது வேலைத் திட்டங்களை எவ்வாறு தயாரிப்பது என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அது குறித்த எதிர்கால நடவடிக்கைகளுக்காக குழுக்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் குறித்து ஆலோசிக்க ஒரு குழுவை நியமிக்கவும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இன்னுமொரு குழுவை நியமிக்கவும் முன்மொழியப்பட்டது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தமக்கு வலுவான நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடைய செய்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஆசிய நாடுகளின் சனத்தொகை அதிகரிப்புடன் உணவுத் தேவையும் அதிகரிக்கும். அதற்காக இந்நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரம் தயாராக வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## அடையாள...

பொலிஸாரை பிரதான சாட்சி அடையாளம் காட்டினார்.

வழக்கு விசாரணையின்போது, "உயிரிழந்தவரை தாக்கினார் என்று கூறப்படும் பொலிஸாரின் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன. இதனால், அடையாள அணிவகுப்பை நடத்தவேண்டாம்" என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இந்த வாதத்தை நீதிவான் ஏற்க மறுத்து விட்டார். இதையடுத்து, அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது.

அடையாள அணிவகுப்பின்போது, உயிரிழந்த இளைஞரை சித்திரவதைக்கு உள்ளாக்கினர் என்று கூறப்படும் நான்கு பொலிஸாரை பிரதான சாட்சி அடையாளம் காட்டினார்.

இதையடுத்து, நான்கு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

குற்றச் சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேகத்தில் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தடுப்புக் காவலில் வைத்து சித்திரவதைகளுக்கு உள்ளான இவர் கடந்த நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 03)

# ஊடகவியலாளரின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்!

## அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, டிசெ. 09

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மிகவும் குறைந்த மட்டத்திலான சம்பளத்தையே ஊடகவியலாளர்கள் பெறுகிறார்கள். ஊடகவியலாளர்களுக்கு எவ்விதமான நலன்புரி திட்டங்களும் தற்போது செயல்படுத்தப்படுவதில்லை. ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. தற்போதைய வாழ்க்கை செலவுகளுக்கு அமைய ஊடகவியலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஊடகவியலாளர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போதைய வாழ்க்கை செலவுக்கு அமைய ஊடக நிறுவனங்கள் ஊடகவியலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில்லை.

தொழில்துறையை முன்னெடுப்பதற்கல்ல,தமது தனிப்பட்ட தேவைகளை கூட நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட முடியாத அளவுக்கு ஊடகவியலாளர்களின் சம்பளம் குறைந்த மட்டத்தில் உள்ளது. ஊடகவியலாளர்களுக்கு என்று கடந்த காலங்களில் 3 இலட்சம் ரூபாய் கடன் வசதி, மோட்டார் வாகன கொள்வனவுக்கு இலகு கடன்,இலகு கடன் திட்டத்தில் வீடு,காப்புறுதி திட்டம் என பலதரப்பட்ட திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

ஆனால், ஏதும் சாத்தியமடையவில்லை.ஊடகவியலாளர்கள் இந்த திட்டங்களால் பயனடையவில்லை. ஊடகவியலாளர்கள் மாடி வீடுகளை கட்டுவதற்கும் சொத்து சேர்ப்பதற்கும் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரவில்லை. கௌரவமான முறையில் தமது தொழிலை முன்னெடுப்பதற்கு உரிய சம்பளத்தை வழங்குமாறு கோருகிறார்கள்.

ஊடகவியலாளர்கள் இல்லையென்றால் தகவல் விநியோகம் ஸ்தம்பிதமடையும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆகவே, ஊடகவியலாளர்களின் நலன் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற 50 பேருக்கான பணிக்கொடை கொடுப்பனவு இதுவரை கொடுக்கப்படவில்லை. ஆகவே ஊடக சேவையை பலப்படுத்துவதாக பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருக்காமல் செயலளவில் செயல்படுத்துங்கள் - என்றார். (ஐ)

## வடக்கில்...

இலத்திரனியல் மின்பட்டியலை ஈ-பில் மற்றும் குறுந்தகவல் (எஸ். எம். எஸ்.) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்காக REG (இடைவெளி) கணக்கு இலக்கம் என ரைப் (type) செய்து 1987 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவலை அனுப்பி பதிவு செய்யலாம்.

மேலும், E- BILL (இடைவெளி) கணக்கு இலக்கம் (இடைவெளி) உங்களுடைய மின்னஞ்சல் என ரைப் செய்து 1987 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்பு பதிவு செய்யலாம்.

இதுபட்டுமல்லாமல் E-BILL.ceb.lk என்ற இணையப் பக்கத்தின் ஊடாகவும் பதிவு செய்யலாம் என்றும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

## 20கோடி...

வங்கியின் தொழில்நுட்ப உதவி சிறப்பு நிதியத்தில் இருந்து 10 இலட்சம் டொலர் ( சுமார் 327 கோடி ரூபாய்) மானியத் தொகையும் வழங்கப்படவுள்ளது. (ஐ)

## பயங்கரவாத...

நாடுகள் மனித உரிமைகள் தொடர்பில் எமக்கு கற்பிக்கத் தேவையில்லை. இலங்கைக்குள் மனித உரிமைகளை பாதுகாப்பதை நாம் பார்த்துக் கொள்கின்றோம். எம்மை விமர்சிக்கும் நாடுகளில் என்ன மனித உரிமைகள் இருகின்றன? காசாவில் 14ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதனை நிறுத்துமாறு கூறுகின்றார்களா? மாறாக ஜனாதிபதி அங்கு சென்று ஆயுதங்களையும், நிதியையும் வழங்குகின்றார். எனவே இவ்வாறான நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையிலுள்ள மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதை நாம் உறுதி செய்ய வேண்டும். பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை நானும் அங்கீகரிக்கவில்லை.

நீதி அமைச்சராக பதவி வகித்த போது, நான் இது தொடர்பான சட்ட திருத்தமொன்றையும் முன்வைத்திருக்கின்றேன். ஏனைய நாடுகளின் அழுத்தங்களால் நாம் இதனைக் கூறவில்லை. எமது நாட்டிலுள்ள தமிழ் மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதேவேளை பிரிவினைவாத நிலைப்பாடுகளுக்குள் செல்ல வேண்டாம் என்று தற்போதுள்ள இளம் தலைமுறையினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தாம் பிரிவினைவாதத்தை விரும்புபவர்கள் இல்லை என்று தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். ஆனால், இலங்கைக்கு வெளியிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் தமது வாக்கு வங்கிகளுக்காக பிரிவினைவாதத்தை ஆதரிக்கின்றனர்.

இங்கிலாந்தில் ஹமாஸ் தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. ஆனால், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை கௌரவிக்கும் வகையில் நினைவேந்தல்கள் இடம்பெறுகின்றன.

இது இரட்டை நிலைப்பாடில்லையா? எனவேதான் இவர்களின் கருத்துகளை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று குறிப்பிடுகின்றோம். இதன் அரத்தம் மக்கள் பாகுபாடாக நடத்தப்பட வேண்டும் என்பதல்ல. இங்கும் நிச்சயம் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பயங்கரவாதத் தடை சட்டம் மாற்றப்பட வேண்டும். அது அநாவசியமாக பயன்படுத்தப்படக்கூடாது. நினைவேந்தல்களை செய்வதில் பிரச்னையில்லை. பிரபாகரனை நினைவு கூர அவரின் பெற்றோருக்கு உரிமையுண்டு. ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பை பெருமைப்படுத்த அனுமதிக்க முடியாது.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை பெருமைப்படுத்துவது நாட்டில் வன்முறையைத் தூண்டும். ஒருமித்த நாட்டுக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வை அங்கீகரிக்கின்றோம். உரிமைகளுக்காக அமைதியாகப் போராடுவதில் தவறில்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## யாழ். சிறைக்குள் பெண் கைதிக்கு சிறைக்காவலர்களால் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ். சிறைச்சாலையில் பெண் கைதியொருவர் சிறைக்காவலர்களால் துன்புறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த பெண் கைதியை நேற்று முன்தினம் பார்வையிடச் சென்றபோது, அவர் "தன்னைச் சிறைக்காவலர்கள் துன்புறுத்துவதாகக் கூறி அழுதார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

அண்மையில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு பஞ்சலிங்கம்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

மானிப்பாய், வட கிழக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பஞ்சலிங்கம்(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்) கடந்த 06.12.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு – தில்லையம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தமுத்து – சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் , மல்லிகாதேவியின்(பவுண்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (அதிபர்), கணேசு (அதிபர்), இராசலிங்கம், புனிதவதி மற்றும் சரஸ்வதி, செல்வராணி, தங்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா, புஸ்பராசா, சுந்தரலிங்கம், பத்மாதேவி, சந்திராதேவி, சிறிஸ்கந்தராசா, ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகீரதி (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), வினோபா (யாழ். பல்கலைக்கழகம்), அமலன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலநாத் (தேசிய சேமிப்பு வங்கி – பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்), அஜந்தன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தன்ஜா, லிசானிக்கா, தியான்சி, அயனா, கைலன்(லீமா), ஆதியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய், வட கிழக்கு மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 0773800076

தகவல்: குடும்பத்தினர்

# என்னிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு அமைச்சுப் பதவியை துறவுங்கள்!

## நீதி அமைச்சரை கண்டித்த கஜேந்திரன் எம்.பி



கொழும்பு, டிசெ. 09

**தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் அட்டூழியங்களை மூடிமறைக்கவே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ என்மீது கொலைக் குற்றச்சாட்டுக்களை வைத்துள்ளார். என் மீது பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள நீதி அமைச்சர் பகிரங்கமாக மன்னிப்பு கோரி பதவியிலிருந்து விலகவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சின் நிலைப்பாட்டை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது என்னையும் எனது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது சேறுபூசும் நோக்கில் பொய்யான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியிருந்தார்.

நான் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் படுகொலைக்கு காரணமாக இருந்ததாக நீதி அமைச்சர் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

ஆதாரமற்ற அப்பட்டமான பொய் ஒன்றையே கூறியிருக்கிறார். சிங்கள மக்கள் மத்தியில் என் மீது வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் இதுபோல பேசி பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தியிருக்கிறார்.

நீதி அமைச்சரின் இந்த தவறான பேச்சை நான் கண்டிக்கிறேன். எனவே இதற்கு அவர் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து விஜயதாஸ பதவி விலக வேண்டும்.

தமிழர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதாக சர்வதேசத்துக்கு இலங்கை அரசாங்கம் காட்டிக் கொண்டாலும் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமைக்கூடப் பறிக்கப்படுவதாகவும், குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் நானும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும் கலந்துகொண்ட நினைவேந்தல் நிகழ்வுகள் திட்டமிட்டு குழப்பப்பட்டன.

தமிழ் மக்களை அச்சுறுத்தி துப்பாக்கி முனையிலேயே நினைவேந்தல்கள் நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் செய்யும் அட்டூழியங்கள், தமிழ் மக்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி சாதாரணமாகக் கைது செய்யும் செயற்பாடுகளை மூடிமுறைக்கவே நீதி அமைச்சர் என் மீதும் எனது கட்சியின் தலைவர் மீதும் பொய்யானக் குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்- என்றார். (அ)

## சீன கப்பல் இலங்கைக்கு வந்து என்ன ஆராய்ச்சி செய்கின்றது?

### கேள்வியெழுப்பினார் செல்வம் எம்.பி.



கொழும்பு, டிசெ. 09

சீனாவின் கப்பல் இலங்கைக்குள் வந்து என்ன ஆராய்ச்சி செய்கின்றது? கடலை ஆளப்படுத்தப் போகின்றார்களா அல்லது மீன் வகைகளை கண்டுபிடிக்கப் போகின்றார்களா? என ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவைப் பொறுத்தவரை நிலமாக இருக்கலாம் கடலாக இருக்கலாம். அது தன்னுடைய அதிகாரத்துக்குள் இருக்க வேண்டுமென நினைக்கும் நாடு.

எனவே இந்த விடயத்தில் இந்தியா தனது பாதுகாப்பு தொடர்பில் எழுப்பும் கேள்வி நியாயமானது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பில் என்னிடம் சில கேள்விகள் உள்ளன. இந்த ஒப்பந்தத்தில் அடிப்படையிலான மாகாண சபைகள் தற்போது செயலிழந்துள்ளன.

அவற்றுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு அமைச்சு எந்தளவில் அக்கறை கொண்டுள்ளது? இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துகின்ற செயற்பாடுகளை எடுத்துள்ளதா ?

எமது கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில் நாம் கடற்தொழில் அமைச்சை மட்டும் குறை கூறமுடியாது.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை காலம் காலமாக நீடிக்கின்றது. இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டு அமைச்சுக்கும் பொறுப்புண்டு. அவ்வாறான தீர்வு முயற்சியில் நீங்கள் ஈடுபட்டால் நாம் உங்களுக்கு முழுமையான ஆதரவு தருவோம் - என்றார். (அ)



## 2024 அரசியலின் புதிய யுகம்!

### ரொஷான் ரணசிங்க தகவல்

கொழும்பு, டிசெ. 09

அடுத்த வருடம் அரசியலின் புதிய யுகமாகும். புதிய ஆற்றல் கொண்ட குழுவினர் அரசியலுக்கு வர வேண் டும். அரசியல் கசப்பானது என கருதிக் கொண்டு இந்த நாட்டை வலுவடைய செய்ய முடியாது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மிஹிந்தலை ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டபாய ராஜபக்ச அரசாங்கம் சக்தி மிக்கதாக காணப்பட்டபோதிலும், உரம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை எனவும் அதனை நீக்கி கொள்ள வேண்டும் எனவும் கூறினேன்.

அவர்கள் அது தொடர்பில் பொருட்படுத்தாமை யாலேயே பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது.

மேலும் தற்போது பாராளுமன்றத்தில் இருக்கும் 225 பேரிலும் சரி, முன்பிருந்த 225 பேரிலும் சரி இலஞ்சம் பெறாத யாரும் இருக்கவில்லை.

இதன் காரணமாகவே இந்த நாட்டில் உள்ள மக்கள் இவ்வாறு துன்பப்படுகிறார்கள். இது கண்டிப்பாக மாற்றமடைய வேண்டும்.

அடுத்த வருடம் அரசியலின் புதிய யுகமாகும். இதற்கு அறிவான தெளிவான புதிய ஆற்றல் கொண்ட குழுவினர் அரசியலுக்கு வர வேண்டும்.

இவர்கள் தாம் கற்றுக் கொண்டதை வைத்து நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும். இவர்கள் இலங்கையில் இருக்க முடியும். அல்லது வெளி நாடுகளிலும் இருக்க முடியும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# வங்கம் - நியூஸி. டெஸ்ட் ஆட்டம் மழையால் பாதிப்பு

மிர்பூர், டிசெ. 09

பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது நாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்துகூட வீசப் படாமல் தடைப்பட்டது.

மிர்பூரில் புதன்கிழமை தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியானது 66.2 ஓவர்களில் 172 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதையடுத்து, துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி சுழல்பந்து வீச்சில் தடுமாறியது. ரொம் லதாம் 4, ஹென்றி நிக்கோல்ஸ் 1, டெவன் கொன்வே 11, டாம் பிளண்டல் 0, கேன் வில்லியம்சன் 13 ஓட்டங்களுடன் வெளியேறினர். முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் நியூஸிலாந்து அணி 12.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 55 ஓட்டங்கள் எடுத்தது. டரில் மிட்செல் 12, கிளென் பிலிப்ஸ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பில் மெஹிதி ஹசன் 3 விக்கெட்களையும், தைஜுல் இஸ்லாம் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். கைவசம் 5 விக்கெட்கள் இருக்க 117 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தை எதிர்கொள்ள நியூஸிலாந்து அணி ஆயத்தமாக இருந்தது. ஆனால், மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் 2-வது நாள் ஆட்டம் தடைப் பட்டது. (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து அபார வெற்றி!

அன்டிகுவா, டிசெ. 09

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி.

துடுப்பாட்டத்தில் வில் ஜாக்ஸ் 73 ஓட்டங்களும், பந்து வீச்சில் சாம் கரன், லியாம் லிவிங்ஸ்டன் ஆகியோர் தலா 3 விக்கெட்களும் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு பங்களிப்பு செய்தனர். இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என சம நிலையை எட்டியுள்ளது.

அன்டிகுவாவில் உள்ள விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்தியத் தீவுகள் அணியானது இங்கிலாந்து பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 39.4 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

தொடக்க வீரரான அலிக் அத்தானாஸ் 4 ஓட்டங்களில் கஸ் அட்கின்சன் பந்தில் ஆட்டம் இழந்தார். தொடர்ந்து கீசி கார்ட்டி 0, பிரண்டன் கிங் 17, ஷிம்ரன் ஹெட்மயர் ஓட்டம் எதையும் பெறாமல் சாம் கரன் பந்தில் நடையை கட்டினர். 23 ஓட்டங்ககளுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் அணித்தலைவர் ஷாய் ஹோப், ஷெர்பான் ரதர்போர்ட் இணை நிதானமாக விளையாடி இணைப்பாட்டத்தை ஏற்படுத்த முயன்றது.

129 ஓட்டங்கள் சேர்த்த இந்த இணையை லியாம் லிவிங்ஸ்டன் பிரித்தார். ஷெர்பான் ரதர்போர்ட் 80 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இதையடுத்து களமிறங்கிய யானிக் கரியாவை 5 ஓட்டங்களிலும், நிலைத்து நின்று விளையாடிய ஷாய் ஹோப்பை 68 ஓட்டங்களிலும் (பந்துகள் 68, சிக்ஸர் 1, பௌண்ட்ரி 6) வெளியேற்றினார் லிவிங்ஸ்டன். இதன் பின்னர் மேற்கு இந்தியத் தீவுகள் அணி எஞ்சிய விக்கெட்களை விரைவாக பறிகொடுத்தது. ரொமாரியோ ஷெப்பர்ட் 19, அல்ஸாரி ஜோசப் 14, குடகேஷ் மோதி 6 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் சாம் கரண்,



லியாம் லிவிங்ஸ்டன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் கஸ் அட்கின்சன், ரெஹான் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். 203 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 32.5 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தொடக்க வீரரான வில் ஜேக்ஸ் 72 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 73 ஓட்டங்கள் விளாசி ஷெர்பான் ரதர்போர்ட் பந்தில் ஆட்டமிழந்தார்.

மற்றொரு தொடக்க வீரரான பில் சால்ட் 21 ஓட்டங்களில் ரொமாரியோ ஷெப்பர்ட் பந்தில் போல்ட் ஆனார். இதன் பின்னர் களமிறங்கிய ஸாக் கிராவ்லி 3, பென் டக்கெட் 3 ஓட்டங்களில் குடகேஷ் மோதி பந்தில் நடையை கட்டினர். ஹாரி புரூக் 49 பந்துகளில், 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 43 ஓட்டங்களும் அணித்தலைவர் ஜோஸ் பட்லர் 45 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 58 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த இணை 5ஆவது விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் சேர்த்தது.

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரை 1-1 என சமநிலைக்கு கொண்டு வந்துள்ளது.

முதல் போட்டியில் மேற்கு இந்தியத் தீவுகள் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது.

# அயர்லாந்துடனான ரி -20; சிம்பாப்வே த்ரில் வெற்றி!

ஹராரே, டிசெ. 09

அயர்லாந்து அணியை இறுதிப் பந்தில் தோற்கடித்து த்ரில் வெற்றி பெற்றது சிம்பாப்வே அணி.

அயர்லாந்து கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் ரி -20 தொடர் முதலாவதாக நடைபெற்று வருகிறது. இதில் முதலாவது ரி - 20 போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்கள் எடுத்தது. அயர்லாந்து தரப்பில் பால்பிரனி 32 ஓட்டங்களும், டெலனி 26 ஓட்டங்களும் எடுத்தனர். சிம்பாப்வே தரப்பில் ரசா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சிம்பாப்வே அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்கள் எடுத்து கடைசி பந்தில் திரில்



வெற்றி பெற்றது. சிம்பாப்வே தரப்பில் சிக்கந்தர் ரசா 65 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1-0 என சிம்பாப்வே அணி முன்னிலையில் உள்ளது. (ஐ)

# 2024 ரி - 20 உலகக் கிண்ணம் அடையாள சின்னம் வெளியீடு

டுபாய், டிசெ. 09

9ஆவது இருபது - உலகக் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெற உள்ளது. இந்த உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 20 அணிகள் கலந்து கொள்ள உள்ளன.




இதன்படி இலங்கை, அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூஸலாந்து, பாகிஸ்தான், தென்னா பிரிக்கா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், அயர்லாந்து, ஸ்காட்லாந்து, பப்புவா நியூ கினியா, கனடா, நேபாளம், ஓமன், நமீபியா மற்றும் உகாண்டா ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) 2024 இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான அடையாள சின்னத்தை வெளியிட்டுள்ளது.

# “பார்வை குறைபாட்டாலேயே விரைவாக ஓய்வுபெற்றேன்”!

டர்பன், டிசெ. 09

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விரைந்து ஓய்வு பெற்றதற்கான காரணத்தை பகிர்ந்துள்ளார் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டி வில்லியர்ஸ்.

‘மிஸ்டர் 360’ என அறியப்படுபவர் டி வில்லியர்ஸ். அதற்கு காரணம் அனைத்து கோணத்திலும் அவர் ஆடும் ஷொட்கள். தென்னாபிரிக்க அணிக்காக மொத்தம் 420 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதன் மூலம் 20,014 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதில் 114 டெஸ்ட், 228 ஒருநாள் மற்றும் 78 ரி - 20 போட்டிகள் அடங்கும். அதுதவிர 184 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி உள்ளார். அதிகபட்சமாக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக 156 போட்டிகளில் அவர் விளையாடி உள்ளார்.

“எனது வலது கண்ணில் நான் பார்வை திறனை இழந்து வந்த நேரம் அது. எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் கடைசி இரண்டு ஆண்டுகள் இடது கண்ணை மட்டுமே பயன்படுத்தி விளையாடினேன். எனக்கு கண்ணில் அறுவை சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர் அதை கேட்டு ஆச்சரியமடைந்தார்.

எனது கிரிக்கெட் வாழ்வில் 2015 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பெற்ற தோல்வி வலி கொடுத்தது. அதே நேரத்தில் பார்வை திறன் காரணமாக 2018ஆம் ஆண்டுடன் அனைத்து வடிவ



கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற விரும்பினேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவை வீழ்த்த விரும்பினேன். என் மீது எந்தவித புகழ் வெளிச்சமும் வேண்டாம் என விரும்பிய காரணத்தால் ஓய்வு பெற்றேன். எனது விளையாட்டு வாழ்க்கை சிறப்பானதாக அமைந்தது. நன்றி” என டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார். கடந்த 2022இல் கண்ணில் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். அதன் பிறகு அவரால் கிரிக்கெட் விளையாட முடியாது என்றும் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட்டில் டி வில்லியர்ஸ் மீண்டும் விளையாட வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. 34 வயதில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அதுவும் 2019 உலகக் கிண்ணத் தொடருக்கு ஓராண்டுக்கு முன்னதாக ஓய்வை அறிவித்து அதிர்ச்சி கொடுத்தார். (ஐ)

ஈழநாடு



# வட கொரியாவை விட்டு உயிரை பணயம் வைத்து படகில் தப்பிய குடும்பம் கூறும் அதிர்ச்சித் தகவல்கள்

ஜேன் மெக்கென்சி

வட கொரியாவில் இருந்த கிம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சாத்தியமற்றதாகக் கருதப்படும் ஒரு விஷயத்தை செய்தார். அவர் தனது குடும்பத்துடன் கடல் வழியாக வட கொரியாவை விட்டுத் தப்பி ஓடினார்.

தனது கர்ப்பிணி மனைவி, தாய், சகோதரரின் குடும்பத்தினர் மற்றும் தனது தந்தையின் சாம்பல் அடங்கிய கலசம் ஆகியவற்றோடு அவர் இந்தப் பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த ஆண்டில் நாட்டைவிட்டு வெளியேறி தென் கொரியாவிற்கு வந்த முதல் நபர்கள் இவர்களே. கோவிட் பேரிடர் தாக்கியபோது, வட கொரியாவின் அரசாங்கம் பீதியடைந்து உலகின் பிற பகுதிகளோடு தங்களது நாட்டிற்கு இருந்த தொடர்புகளைத் துண்டித்தது. அதன் எல்லைகளை மூடியது மற்றும் வர்த்தகத்தை துண்டித்தது.

ஒரு காலத்தில் அடிக்கடி மக்கள் நாட்டை விட்டு தப்பி ஓடும் சம்பவங்கள், இந்தத் துண்டிப்பிற்குப் பிறகு முற்றிலுமாக நின்றது.

கிம் ஊடகங்களிடம் பேசுகையில், வடகொரியாவில் மக்கள் பட்டினியால் இறக்கும் சம்பவங்கள் மற்றும் அடக்குமுறை அதிகரிப்பது உள்ளிட்ட புதிய விவரங்களை அவர் தெரிவித்தார். அவர் தனது முழு பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும், சியோலில் உள்ள தனது குடும்பத்தைப் பாதுகாக்கவும் எங்களிடம் கேட்டுக் கொண்டார்.

கிம்மின் அனைத்து குற்றச்சாட்டுகளையும் சரிபார்க்க முடியவில்லை. ஆனால் பெரும்பாலான விவரங்கள் மற்ற ஆதாரங்கள் மூலம் நாம் இதற்கு முன்பு கூறியவற்றுடன் ஒத்துப்போகின்றன.

**பல ஆண்டுகளாக போடப்பட்ட திட்டம்**

கிம் மற்றும் அவரது சகோதரர் தப்பிக்க முயன்ற அந்த இரவில் பலத்த புயல் காற்று வீசி கடல் கொந்தளிப்பாக இருந்தது. கடல் சீற்றத்தோடு இருக்கும்போது கடலோர காவல் படையினரால் கரையில் இருந்து வெகு தூரம் வர முடியாது என்பது கிம்முக்கு தெரியும். இப்படிப்பட்ட ஒரு இரவுக்காகத்தான் கிம் பல ஆண்டுகள் காத்திருந்தார்.



கிம்மின் சகோதரர் குழந்தைகளுக்கு தூக்க மாத்திரை வழங்கப்பட்டு அவர்கள் தூங்க வைக்கப்பட்டனர். அவர்கள் வேறொரு படகு ரகசியமாக நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு காவலர்களின் தேடுதல் விளக்குகளில் இருந்து தப்பிக்க கவனமாகச் சென்றனர்.

அவர்கள் படகை அடைந்ததும், பழைய அரிசி சாக்குகளுக்குள் குழந்தைகளை மறைத்து சாக்கு மூட்டைகளைப் போல ஓரமாக வைத்தனர். அதனுடன், தென் கொரியாவுக்கான அவர்களது பயணம் தொடங்கியது.

கிம்மும், அவரது சகோதரரும் கையில் ஆளுக்கொரு வாளை எடுத்துக் கொண்டனர். பெண்கள் தங்களது கைகளில் முட்டையில் ஓட்டை போட்டு அதில் மிளகாய் தூள் மற்றும் கருப்பு மணலை நிரப்பி கடலோர காவல் படையை எதிர்கொண்டால் அவர்களைத் தாக்கத் தயாராக இருந்தனர்.

**வட கொரியாவில் பட்டினியால் சாகும் மக்கள்**

கிம்மை தென் கொரியாவின் தலைநகர் சியோலில் காவல்துறையின் பாதுகாப்பில் அவர் இருந்தபோது சந்தித்தோம். வட கொரியாவில் இருந்து தென் கொரியாவிற்கு தப்பி வருபவர்களுக்கான முகாமில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டு சில வாரங்கள்தான் ஆகியிருந்தது.

வட கொரியாவில் இருந்த நிலைமை குறித்து அவர் கூறுகையில், "கொரோனா தொற்றில் ஆரம்ப காலகட்டத்தில் மக்கள் மிகவும் பயத்தில் இருந்தனர். வடகொரியாவில் கோவிட் விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. யாராவது விதியை மீறியதாகத் தெரிய வந்தால் காவல் துறையினர் அந்த கிராமத்தையே தனிமைப்படுத்துவார்கள். அங்கிருக்கும் மக்களால் வெளியே செல்ல முடியாது. முக்கியமாக அவர்களுக்கு உணவும் வழங்கப்படாது," என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'உணவில்லாமல் மக்கள் சிறிது காலம் பட்டினியால் அவதிப்பட்ட பின்பு, அரசு லாரியில் உணவு விநியோகம் செய்யும். அந்த உணவின் விலை குறைவாக இருப்பதால் மக்கள் அரசைப் பாராட்ட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்," என்று கிம் கூறினார்.




கொரோனாவின் தாக்கம் குறைந்த பின்பும் நீண்ட காலத்திற்கு இதே நிலைமை நீடித்தது என்றும் இது மக்களை ஒடுக்குவதற்கான ஒரு வழிமுறையா என மக்களுக்கு சந்தேகம் எழத் தொடங்கியது என்றும் கிம் கூறினார்.

மேலும், பட்டினியால் நிறைய பேர் இறந்துபோன தாகவும் கிம் கூறுகிறார். கடந்த பிப்ரவரி மாதம் ஒரு வயதான தம்பதியை கொலை செய்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டார். ஆனால், விசாரணையில் அவர்கள் பசியில் இறந்ததாகவும் அவர்களின் உடல்களை எலிகள் கடித்திருந்ததாகவும் தெரிய வந்ததாக கிம் தெரிவித்தார்.

இதுதவிர தென் கொரியாவிற்கு ஆதரவாகச் செயல்படுவதாகத் தெரிய வந்தால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டத்தை வடகொரிய அரசு 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டு வந்தது.

இந்தக் காரணங்களால் மிகவும் வேதனைக்குள்ளான கிம், வட கொரியாவை விட்டு தப்பிக்க முடிவெடுத்ததாகக் கூறுகிறார்.

**கண்ணி வெடிகள் நிறைந்த காட்டில் நடந்த பயணம்**

முதலில், கடலுக்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி தேவைப்பட்டது. அருகிலுள்ள ராணுவ தளத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டுள்ளார்கள். அங்கு பொது மக்கள் மீன் பிடிக்க அனுப்பப்பட்டனர். பின்னர் அவை ராணுவ உபகரணங்கள் வாங்குவதற்காக விற்கப்படும். கிம்மின் சகோதரர் இந்தத் திட்டத்தில் சேர்ந்தார்.

இதற்கிடையில், கிம் அப்பகுதியில் ரோந்து சென்ற கடலோரக் காவலர்கள் மற்றும் பாதுகாவலர்களுடன் நட்பாகத் பழகத் தொடங்கினார். அவர்களின் இயக்கங்கள், நெறிமுறைகள் மற்றும் ஷிஃப்ட் முறைகள் பற்றிய தகவல்களை ரகசியமாகச் சேகரித்தார். இதன்மூலம் அவரும் அவரது சகோதரரும் இரவில் எப்போது படகை எடுத்துச் செல்ல முடியும் என்று அவர் முடிவு செய்தார்.



பின்னர்தான் அவருக்கு இருந்த மற்றொரு கடினமான பணி நினைவிற்கு வந்தது. வயதான தாயையும் மனைவியையும் தன்னுடன் சேரும்படி சமாதானப்படுத்துவது. இருவரும் வெளியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இறுதியில் சகோதரர்கள் தங்கள் தாயை சம்மதிக்கச் செய்தனர்.

"எங்கள் தாய் கலக்கமடைந்து நிறைய அழுதார். ஆனால் இறுதியாக ஒப்புக்கொண்டார்" என்று கிம் கூறினார்.

அவர்கள் தப்பித்த பிறகு அதிகாரிகள் தங்கள் தந்தையின் கல்லறையை இழிவுபடுத்துவார்கள் என்று பயந்து கிம் மற்றும் அவரது சகோதரர் அவரது உடலைத் தோண்டி எடுத்தனர். பிறகு தோண்டிய இடத்தை மூடிவிட்டு, அவர்களது தந்தையின் உடலை ஒதுக்குப்புறமாகக் கொண்டு சென்று எரித்து சாம்பலை எடுத்துக்கொண்டனர்.

அவர்கள் பின்னர் இருட்டில் கடக்க வேண்டிய கண்ணி வெடிகள் நிறைந்த இடத்தை ஆய்வு செய்தனர். அவர்கள் மருத்துவ மூலிகைகளை எடுப்பது போல் பாசாங்கு செய்து, அதன் வழியாக தெளிவான பாதையை வரைந்தனர். மக்கள் வெளியேறுவதைத் தடுக்க கடற்கரையோரத்தில் சமீபத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. ஆனால் அங்கு குறைவான காவலர்கள் இருப்பதால், அது பாதுகாப்பான வழியாக இருந்ததாக கிம் கூறினார்.



மே 6ஆம் தேதி இரவு 10 மணிக்கு அவர்கள் படகில் பயணம் செய்தனர். அவர்கள் அனுமதிக்கப்பட்ட தூரம் வரை பயணம் செய்தவர்கள், அங்கிருந்து தொடர்ந்து சென்றனர். குறைந்த அலைகள் பாறைகள் மற்றும் கற்பாறைகளை வெளிப்படுத்தியிருந்தன.

அது பாதுகாப்பானது என்பதை உணர்ந்தவுடன், அவர்கள் நீரோட்டங்களின் பாதையில் முழு வேகத்தில் சென்றனர். ஒரு கப்பல் பின்தொடர்வதை கிம் பார்த்தார். ஆனால் அது அவர்களைப் பிடிக்க முடியவில்லை

'அந்த நேரத்தில், பதற்றத்தின் உச்சியில் இருந்தேன். நான் இடிந்து விழுவது போல் உணர்ந்தேன்," என்று கிம் கூறினார். தென் கொரியாவின் யோன்பியோங் தீவை நெருங்கியபோது அவர்கள் டார்ச் லைட்டுகளை கரையை நோக்கி அடித்தனர். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரத்திற்குப் பிறகு கடற்படையால் மீட்கப்பட்டனர்.

எல்லாம் திட்டமிட்டபடியே நடந்தன. "பருவ நிலை எங்களுக்கு உதவியது போல் இருந்தது," என்று அவர் கூறினார்.

"கடல் மூலமாக வட கொரியாவை விட்டு தப்பிப்பது மிகவும் அரிது"

கிம் தப்பித்த சம்பவம் அரிதானது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளதாக வட கொரியாவில் உள்ள லிபர்ட்டியைச் சேர்ந்த சொகீல் பார்க் கூறினார். அவர் கூறுகையில்,'கடல் வழியாக தப்பிக்க துல்லியமான திட்டமிடல், நம்ப முடியாத தைரியமும் வேண்டும். பல வருடங்களாக பல வட கொரியர்கள் கடல் வழியாக தப்பிக்க முயன்றனர். ஆனால் யாரும் வெற்றி பெறவில்லை," என அவர் கூறினார்.

வட கொரியாவை விட்டு சீனா வழியாக தப்பிக்க நினைப்பவர்களுக்கு உதவுபவரான ஸ்டீபன் கிம் கூறுகையில், "பணக்காரர்கள் மற்றும் வலிமையான தொடர்புகள் இருப்பவர்களால் மட்டுமே வடகொரியாவை விட்டு தப்பிக்க முடியும். கொரோனாவிற்கு முன்பு வருடத்திற்கு வட கொரியாவில் இருந்து 1000 பேர் சீனாவிற்கு தப்பிச் செல்வார்கள். ஆனால், கொரோனாவிற்கு பின்பு கடந்த நான்கு ஆண்டுகளில் 20 பேர் மட்டுமே தப்பித்தனர்," எனக் கூறினார்.

வட கொரியா தற்போது சீனா மற்றும் ரஷ்யாவுடனான தனது உறவுகளை ஆழப்படுத்துகிறது. அதே நேரத்தில் மேற்கு நாடுகளுடனான வட கொரியாவின் உறவு மோசமாக உள்ளது. இந்த நிலைமையால் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காண்பது சர்வதேச சமூகத்திற்கு மிகவும் கடினமாகிவிட்டது.

கிம்மின் குடும்பத்தினர் மீட்கப்பட்ட பிறகு, அவர்கள் வட கொரிய உளவாளிகள் அல்ல என்பதை தென் கொரியாவின் உளவுத்துறையிடம் விளக்க வேண்டும். பின்னர் அவர்கள் மீள்குடியேற்ற மையத்தில் தென் கொரியாவில் வாழ்வது பற்றிக் கற்பிக்கப்பட்டனர்.

கிம்மின் குடும்பம் அக்டோபர் மாதம் மீள்குடியேற்ற மையத்தில் இருந்து ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் குடியேறியது. அவரது மனைவிக்கு குழந்தையும் பிறந்தது. கிம்மின் தனது மனைவிக்கு தென் கொரியாவின் சப்வேக்களை பயன்படுத்தத் தெரியவில்லை என்றும் அதனால் அவர் வழி தவறித் தொலைந்து போயிருக்கிறார். இது அவரது மனைவியின் தன்னம்பிக்கையைக் குறைக்கிறது என அவர் கூறினார். ஆனால் கிம்முக்கு தென் கொரியாவில் வாழ்வது கடினமாக இல்லை.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் ஆர்வத்து டன் எங்கள் பக்கத்தில் இருந்த மேசையிலிருந்து எனது ஏர்போட்ஸ் பெட்டியை எடுத்து, அதைத் தன் கையில் திருப்பினார். அது வயர்லெஸ் ஹெட்ஃபோன்கள் என நான் கூறியபோது அவர் நம்பவில்லை. நான் அதை என் காதுகளில் வைத்த பிறகுதான் அவர் முகத்தில் ஒரு புரிதல் அலை வீசியது, அவர் சிரித்தார்.

இதுபோன்ற பல ஆச்சரியங்கள் மற்றும் சவால்கள் அவர்களுக்கு காத்திருக்கிறது. இது அவற்றின் தொடக்கம் மட்டுமே.

# இராணுவத்தின் மீது காதல் கொண்டிருப்பது நிதி நெருக்கடிக்கு பங்களிப்பு செய்திருக்கிறது!

திஸரணி குணசேகர

(நேற்றைய தொடர்ச்சி)

வாக்காளர்கள் தொடர்ச்சியாக அறியாமையில் இருப்பது, பிள்ளைப் பருவத்திற்கேயுரிய தற்காலிக இயல்பிலான அப்பாவித்தனம் அல்ல. நாங்கள் நிரந்தரமான மனநோய் கூறொன்றைக் கொண்டிருப்பதனையே அது காட்டுகின்றது. வாக்காளர்கள் என்ற முறையில் நாங்கள் அறிவு மரத்திலிருந்து தொடர்ந்து வேண்டுமென்றே எம்மை விலக்கி வைத்துக் கொள்கிறோம். நாங்கள் நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஆட்களுக்கு வாக்களிக்கின்றோம். சான்று அதில் எத்தகைய பாத்திரத்தையும் வகித்து வரவில்லை. உண்மை என்ற விடயத்துக்கு அதில் எந்த இடமுமில்லை பிரசாரம் போதுமானது, போலி வார்த்தை ஜாலங்கள் போதுமானவையாகும் ஒரு சில தலைவர்கள் அசல் வெள்ளை நிறத்திலும் பார்க்க தம்மை வெள்ளையாகக் காட்டிக் கொள்வதில் வல்லவர்கள். எல்லாக் கனவுகளையும் அவர்கள் நனவாக்குவார்கள். 2019ஆம் ஆண்டில் கோட்டபாய ராஜபக்ஷ அந்த மனிதராக இருந்து வந்தார். காரியங்களை நிகழ்த்தக் கூடிய ஒரு கதாநாயகனாக அவர் தெரிந்தார். அவரும், அவருடைய சகோதரர்களும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்கள். ஆனால், அவர்கள் அதிகாரத்தை வலிந்து கைப்பற்றிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, சுமார் 6.9 மில்லியன் இலங்கை மக்களால் சுதந்திரமாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு வாக்களித்தவர்கள் அனைவருமே சிங்களவர்கள் அதிலும் பெரும்பாலானவர்கள் சிங்கள பௌத்தர்கள். இரசாயன உர வகையிலிருந்து இயற்கை உர வகைக்கான மாபெரும் நிலைமாற்றம் தொடர்பான கட்டளையை கோட்டபாய ராஜபக்ஷ 2022 ஜனவரி மாதத்தில் வெளியிட்டார். அச்சந்தர்ப்பத்திலும் கூட, ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச அல்லது அநுரகுமார திசாநாயக்க ஆகியோரைப் பார்க்கிலும் அவர் இலங்கையில் ஜனரஞ்சகமானவராக இருந்து வந்தார். 2022 ஜனவரி மாதத்தில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் கணிசமான அளவிலான ஒரு பெரும்பான்மையுடன் அவர் வெற்றியீட்டியிருப்பார்.

கோட்டபாய ராஜபக்ஷவின் சிறுமதி மற்றும் எந்த ஒரு விடயம் குறித்தும் போதியளவில் விளக்கமற்ற நிலை என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, சுமார் ஏழு மில்லியன் இலங்கையர்கள் அவருக்கு வாக்களித்தது ஏன்? மரக்கறிகளை கொள்வனவு செய்வது போன்ற தமது நாளாந்த நடவடிக்கைகளில் நுணுக்கமான விதத்தில் தமது புத்திசாலித்தனத்தைக் காட்டும் சுமார் ஏழு மில்லியன் இலங்கையர்கள் ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கும் போது மட்டும் அந்த விமர்சனபூர்வமான சிந்தனையைப் பயன்படுத்தாதிருந்தது ஏன்? நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றோம் என்ற நிரந்தரமான ஒப்பாரியில் பிரயோசனமில்லை. அத்தகைய மோசடிப் பேர்வழிகளால் நாங்கள் ஏமாற்றப்பட்டது ஏன்? அந்தக் கேள்வியை நேரடியாக எதிர்கொண்டு, அது குறித்து நாங்கள் சிந்தித்துப் பார்த்தாலேயொழிய, 2024 இலும் அதற்கு அப்பாலும் இதே தவறை நாங்கள் இழைக்க மாட்டோம் என்பது என்ன நிச்சயம் இருக்கிறது? கானல் நீர் குறித்து நாங்கள் தெரிந்து கொள்ள மறுத்தால், அதனைப் பின்தொடர்ந்து செல்வதை எவ்வாறு தவிர்த்துக் கொள்ள முடியும்?

இந்த வாரம் உயர் நீதிமன்றம் மற்றொரு நிர்ணயகரமான தீர்ப்பை வழங்கியது. அதாவது, 2020ஆம் ஆண்டில் ரம்ஸி ராஸிக் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தமை அரசியல் யாப்புக்கு முரணானது என அது கூறியது. ஓய்வு பெற்ற அரச ஊழியரும், சமூக ஊடகச் செயற்பாட்டாளருமான ராஸிக், பெருந்தொற்று தொடர்பாக முஸ்லிம்கள் மீது பழியைச் சுமத்தும் ராஜபக்ஷர்களின் ஆசீர்வாதத்துடனான ஒரு பிரசார இயக்கம் தொடர்பாக 2020 ஏப்ரல் தொடக்கத்தில் பேஸ்புக் பதிவொன்றை இட்டிருந்தார். அனைத்து இலங்கை மக்களின் சார்பிலும் இந்தக் காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய பொய்களை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டும் என ராஸிக் எழுதினார். நீதிக்கான எழுதுகோலினாலும், விசைப் பலகையினாலும் நீதி மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கென முன்னெடுக்கப்படும் கருத்தியல் ரீதியான ஒரு ஜிகாத் ஆக (போராட்டத்தை) அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

மிகவும் விரிவான வாதங்களுடன், சிறப்பான விதத்தில் எழுதப்பட்டிருக்கும் இந்தத் தீர்ப்பு அசல் சிங்கள பேஸ்புக் பதிவின் ஒரு பிரதியையும் உள்ளடக்குகின்றது. இந்தப் பதிவு பயங்கரவாத இயல்பினைக் கொண்டது என ஒருவர் எவ்வாறு கருதியிருக்க முடியும் என்பதனைப் புரிந்துகொள்வது கடினமானதாகும். பல்வேறு வாக்குமூலங்களில் வெளியிடப்பட்டிருக்கும் விபரங்கள், திரு. ராஸிக்கின் கைதும், அவரை ஓர் ஆபத்தான ஆளாக சித்தரிக்கும் நிலையும் பரவலான விதத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் முஸ்லிம் எதிர்ப்புப் பிரசார இயக்கமொன்றின் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது என்பதனை காட்டுகிறது. அந்த முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் ராஜபக்ஷர்களுக்கு கணிசமான அளவிலான அரசியல் - தேர்தல் இலாபங்களை ஈட்டிக் கொடுத்திருக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சுட்டிக் காட்டுவதைப் போல ராஸிக்கின் குற்றச்செயல் தொடர்பாக "முதலில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டது." இந்தத் தகவலை வழங்கியவர் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவின் இராணுவச் சேவைகள் உதவியாளர் (நான்காவது பிரதிவாதி). "உண்மையிலேயே இந்த 'டீ' அறிக்கையின் பிரகாரம் (மூன்றாவது பிரதிவாதியான) ஹேமச்சந்திர "முறைப்பாட்டாளராக' இருந்து வந்தார். அவர் 2020 ஏப்ரல் 6ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்வைத்த முறைப்பாடே இந்த புலனாய்வைத் தூண்டியிருந்தது."

> **போர் தேசிய செல்வத்தின் பிரமாண்டமான ஓர் அளவை விழுங்கியிருக்கின்றது. போருக்குப் பிற்பட்ட காலத்தில் இதுவரையில் நாங்கள் கல்வி, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற எந்தவொரு துறையிலும் பார்க்க அதிக தொகையை பாதுகாப்புக்காக செலவிட்டு வந்திருக்கிறோம்.**

ரவி செனவிரத்ன, ஷானி அபேசேகர மற்றும் நிசாந்த சில்வா போன்றவர்களின் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த பேஸ்புக் பதிவை பார்வையிட்டு, அதன் தீங்கற்ற இயல்பை சரியாக புரிந்து கொண்டிருக்கும். அவர்கள் ஒரு அப்பாவி மனிதரை கைது செய்து, அவரை பல மாதங்கள் விளக்கமறியலில் வைத்திருக்க மாட்டார்கள். ராஜபக்ஷர்கள் அதிகாரத்துக்கு வந்தவுடனேயே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை தொழில்வாண்மையாளர்களிடமிருந்து விடுவித்து, 'ஆமாம் சாமிகளின்' கைகளில் ஒப்படைத்தமை குறித்து வியப்படைவதற்கு எதுவுமில்லை. வரி அடித்தளம், வெளிநாட்டு ஒதுக்குகள், இலங்கை ரூபா மற்றும் விவசாயம் என்பவற்றுக்கு அவர்கள் எதனைச் செய்தார்களோ, முதலில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்பாக அதே காரியத்தைச் செய்தார்கள். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த புத்திசாலிகளான அந்தப் புலனாய்வு அதிகாரிகள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் முஸ்லிம் ஆதரவாளராக, தமிழ் ஆதரவாளராக இருந்து வந்தமை மற்றும் ஒருவர் இரகசியமாக தமிழராக இருந்து வந்தார் போன்ற குற்றச்சாட்டுக்களும் அடங்கும். இனவாதம் என்பது பெரும்பாலான விடயங்களை மூடி மறைப்பதற்கான விரிந்த ஒரு போர்வையாக இருந்து வருகின்றது.

### ஜனநாயக ரீதியான அதிருப்திகள்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பீட்டாய்வின் பிரகாரம், நாட்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனம் நீதித்துறையாக இருந்து வரவில்லை. மாறாக, இராணுவமே அவ்விதம் மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனமாக இருந்து வருகின்றது. பதிலளித்தவர்களில் 60 வீதம் இராணுவத்தின் மீது அவ்விதம் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். (13 வீதம் அத்தகைய நம்பிக்கையிருக்கவில்லை. அதேவேளையில், 22 வீதம் நடுநிலையாக இருந்து வந்ததுடன், 5 வீதம் பதிலளிக்கவில்லை). இராணுவத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் மக்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள பௌத்தர்களாக இருந்து வருவார்கள் என்பதனையும், 'நம்பிக்கை இல்லை' என்று சொன்னவர்களிலும், நடுநிலை வகித்தவர்களிலும் பெரும்பாலானவர்கள் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வருவார்கள் என்ற விடயத்தையும் ஊகிப்பது கடினமானதல்ல. எவ்வாறாக இருந்தாலும், இலங்கை இராணுவம் பெயரில் மட்டுமே இலங்கையாக இருந்து வருகின்றது. யதார்த்தத்தில் சிங்கள பௌத்த நலன்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும் ஒரு சிங்கள பௌத்த இராணுவமாகவே அது உள்ளது. குடிசனவியல் ரீதியில் பன்முக இயல்பைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் இவ்விதம் தனியொரு இனத்தைக் கொண்ட இராணுவம் இருந்து வருவது அபாயகரமானதாகும்.

இதனை (அதாவது, இராணுவம் பெருமளவுக்கு மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனமாக இருந்து வரும் விடயத்தை) ஏனையவற்றுடன் இணைத்துப் பார்க்கவும் - 69 வீதம் நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை. மிகப் பெருமளவில் 78 வீதம் அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை - இப்போது இந்தச் சித்திரம் இருண்டதாக மாற்றமடைகிறது. நாடாளுமன்றம் வாக்காளர்களால் சுதந்திரமான விதத்திலும், நியாயமான விதத்திலும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும் அது வெறுக்கப்படுகின்றது. நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அருவருப்பு கொண்டிருக்கும் அதேவேளையில், அவர்களுக்கு வாக்களித்து வருகின்றோம். இராணுவத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றோம். நாட்டின் ஜனநாயகத்தின் ஆரோக்கிய நிலையின் மீது அது எந்த மாதிரியான ஒரு தாக்கத்தினை எடுத்து வரும் என்பதை ஊகிப்பது கடினமானதல்ல.

நாங்கள் தொடர்ந்தும் இராணுவத்தின் மீது காதல் கொண்டிருப்பது தற்போதைய நிதி நெருக்கடிக்கு இரண்டு வழிகளில் பங்களிப்புச் செய்துள்ளது. போருக்குப் பிற்பட்ட காலத்தில் பாதுகாப்புச் செலவுக் குறைப்பை தடுத்துக் கொள்வதற்கு அது உதவியிருக்கின்றது. அனைத்து நியாயப்படுத்தல்களுக்கும் மாறான விதத்தில், போருக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கையின் பாதுகாப்புச் செலவு உயர்ந்து சென்றிருக்கின்றது. இப்பொழுது நாங்கள் போர் இடம்பெற்ற காலத்தில் செலவிட்டதிலும் பார்க்க அதிக தொகையை இராணுவம் தொடர்பாக செலவிட்டு வருகின்றோம். அது 2019 இல் கோட்டபாய ராஜபக்ஷவின் அமோக வெற்றிக்கும் உதவியிருந்தது. முன்னைய இராணுவ அதிகாரியான அவர் போர் வீரர்களுக்குக் கிடைக்க வேண்டிய கௌரவத்தையும், பெருமிதத்தையும் மீண்டும் பெற்றுக் கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

மகா சங்கத்தினரை தவிர, இராணுவமே இலங்கையில் பெருமளவுக்கு முழுவதும் சிங்கள பௌத்த நிறுவனமொன்றாக இருந்து வருகின்றது. இராணுவத்தின் மீது மக்கள் காட்டியிருக்கும் உயரளவிலான நம்பிக்கை சிறந்த முகாமைத்துவம் அல்லது நிதி மதிநுட்பம் போன்ற விடயங்களிலிருந்து தோன்றவில்லை. மாறாக, அதனை தம்முடன் சேர்த்து அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலையிலிருந்து தோன்றுகிறது (இராணுவம் இலங்கையின் அறவே வெளிப்படைத்தன்மையற்ற நிறுவனமாக இருந்து வருகின்றது). அதே விதத்தில் இராணுவம் தவறிழைக்க முடியாது எனவும், ஊழல் அற்றது எனவும் நோக்கப்படுவதுடன், தற்போதைய ஒவ்வொரு அரசியல் மீட்பரும் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் புனிதப் படுத்தப்படுகின்றாரோ அதே நம்பிக்கையின் அடிப்படையிலேயே இராணுவமும் புனிதப்படுத்தப்படுகின்றது.

ஆறு நாள் போரில் இஸ்ரேல் ஈட்டிய அபார வெற்றி குறித்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின் எழுதும் போது நூலாசிரியரும், பத்தி எழுத்தாளருமான மெயர் ஷெலெவ் பாலஸ்தீன் பிரச்சினை தீர்க்கப்படாதிருக்கும் காரணத்தினாலேயே இஸ்ரேல் இப்போது ஒரு முட்டுச் சந்தில் நின்று கொண்டிருக்கிறது என விவரித்தார்: "நாற்பது ஆண்டுகள் கடந்து சென்றுள்ளன. இஸ்ரேல் உண்மையிலேயே மதி மயங்கியுள்ளது. நாடு ஒரே விடயத்திலேயே தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது: ஆக்கிரமிப்பு. நாற்பது ஆண்டுகள் கடந்துள்ளன. 1948ஆம் ஆண்டில் இஸ்ரேல் எதனைச் சாதித்துக் கொள்ள விரும்பியதோ அவை அனைத்தையும் இப்பொழுது உதாசீனம் செய்துள்ளது: கல்வி, ஆராய்ச்சி, நலனோம்பல், சுகாதாரம்." (டுழள யுபெநடநள வுஅநள 5.6.2007)

நாங்களும் கூட அதே மாதிரியானதொரு நிலையில் இருந்து வருகின்றோம். போர் தேசிய செல்வத்தின் பிரமாண்டமான ஓர் அளவை விழுங்கியிருக்கின்றது. போருக்குப் பிற்பட்ட காலத்தில் இதுவரையில் நாங்கள் கல்வி, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற எந்தவொரு துறையிலும் பார்க்க அதிக தொகையை பாதுகாப்புக்காக செலவிட்டு வந்திருக்கிறோம். அரச துறையின் சுமை குறித்து நாங்கள் புலம்பினாலும் கூட, அரச ஊழியர்களின் சம்பளச் செலவில் சுமார் அரைவாசிப் பகுதி இராணுவத்திற்காகச் செலவிடப்பட்டு வருகின்றது என்ற விடயம் குறித்து நாங்கள் ஒன்றும் கூறுவதில்லை. அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மித மிஞ்சிய அளவிலான ஊழியர்களைக் கொண்டிருந்தால் இராணுவமும் அதே விதத்திலேயே இருந்து வருகின்றது. (17ம் பக்கம் பார்க்க)

# வெள்ளத்தில் மிதந்த சென்னை....!

பதிவுகள்
















# அலி சப்ரிக்கு நீதியமைச்சு வழங்கவேண்டாமென கோட்டாபயவிடம் கோரினார் கர்தினால் மல்கம்!

## உதய கம்மன்பில எம்.பி. சபையில் தகவல்

கொழும்பு, டிசெ. 09

அலி சப்ரிக்கு நீதியமைச்சு பதவியை வழங்க வேண்டாம் என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு அறிவித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் இடம்பெற்றவுடன் புதிய அமைச்சரவை நியமனத்துக்காக 2020.08.11 ஆம் திகதி கண்டிக்குச் சென்று இரவு அங்குள்ள ஹோட்டலில் தங்கியிருந்தோம்.

அப்போது கோட்டாபய எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து“ உதய, அலி சப்ரிக்கு நீதியமைச்சுப் பதவியை வழங்குவதற்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

நீங்கள் அலி சப்ரியுடன் பேசுங்கள். அவர் இணக்கம் தெரிவித்தால், கைத்தொழில் அமைச்சை அவருக்கு வழங்கலாம், நீதியமைச்சராக நிமல் சிறிபால டி சில்வாவை நியமிக்கலாம்“ என்றார்.

நான் இவ்விடயம் தொடர்பில் அலி சப்ரியிடம் அப்போதே பேசினேன்

அதற்கு அவர், “நான் அரசியல்வாதி அல்லன், கிடைக்கும் அனைத்து அமைச்சுப் பதவிகளையும் வகிப்பதற்கு. நீதித்துறையில் சேவையாற்றியுள்ளேன். ஆகவே நீதிக்கட்டமைப்பில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் பல உள்ளன. அதனால் தான் நீதியமைச்சுக்கு இணக்கம் தெரிவித்தேன்.

அமைச்சுப் பதவி இல்லை என்றால் நான் முரண்படப் போவதில்லை. அமைச்சு இல்லை என்றால் இப்போது கொழும்புக்குச் செல்கிறேன். பிரச்னை இல்லை “என்றார்.

இதன் பின்னர் நான் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து “ அமைச்சரவையில் வேறு முஸ்லிம் உறுப்பினர்கள் உள்ளார்களா என்று வினவினேன். அதற்கு அவர் இல்லை- என்றார்.

அவ்வாறாயின் நீதியமைச்சராக அலி சப்ரியை நியமியுங்கள். அவர் இனவாதியோ, மோசடியாளரோ அல்லர். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் அவர் தலையிடமாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆகவே அவரை நீதியமைச்சராக நியமியுங்கள். சிங்கள சமூகத்திடமிருந்து எதிர்ப்புகள் எழுந்தால் அதை நான் சமாளித்துக் கொள்கிறேன்“ என்றேன். இதன் பின்னரே அவர் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டார் -என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, உண்மையை நீங்கள் குறிப்பிட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் இனத்தையோ,மதத்தையோ அடிப்படை யாக கொண்டு அரசியலில் ஈடுபடவில்லை.

ஒட்டுமொத்த மக்களுக்காகவே அமைச்சு பதவியை வகிக்கிறேன். இலங்கையர் என்ற அடிப்படையில் செயற்படுகிறேன். நாட்டுக்கு எதிராக எந்நிலையிலும் செயற்படமாட்டேன். அவ்வாறான நிலை தோற்றம் பெற்றால் பதவி துறப்பேன்-என்றார். (அ)

# இராணுவத்தின் மீது காதல் கொண்டிருப்பது...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாக வர விரும்பும் எந்தவொரு தலைவரும் ஆவேசமடைந்த புத்த பிக்குகள், போர் வீரர்கள் மற்றும் ஏனைய தேச பக்தர்கள் ஆகிய தரப்புக்களினால் தனக்கு ‘தேசத் துரோகி’ என்ற பட்டம் சூட்டப்படுவதை விரும்ப மாட்டார்கள். இராணுவச் செலவுகளை குறைப்பதாக ரணில் விக்ரமசிங்க வழங்கியிருக்கும் வாக்குறுதியை நாங்கள் கிஞ்சித்தும் பொருட்படுத்த வேண்டிய அவசி யமில்லை. அநுரகுமார திசாநாயக்க அல்லது சஜித் பிரேமதாச போன்றவர்களும் கூட இந்த விடயத்தில் உத்தமமானவர்கள் எனக் கூற முடியாது. இராணுவம் உண்மையான ஒரு புனிதப் பசுவாக இருப்பதுடன், மகாசங்கத்தினரும் கூட அதற்கு அஞ்சுகிறார்கள்.

நிதி நெருக்கடிக்கான தர்க்க ரீதியான முதன்மைத் தீர்வு ஆபத்தானது எனக் கருதி நிராகரிக்கப்படும் பொழுது, எஞ்சியிருப்பது வரிகளை உயர்த்துவது அல்லது சேமநலச் செலவுகளைக் குறைப்பது போன்ற நியாயமற்ற தெரிவுகளாகும். அத்தகைய வழிமுறைகள் பொருளாதார நெருக்கடியை எந்த விதத்திலும் தணிக்கப் போவதில்லை. அதே வேளையில், அவை பொதுமக் களின் துன்பத்தை தீவிரப்படுத்தி, அதற்கூடாக மக்களின் எதிர்ப்புக்களைத் தூண்ட முடியும். வாக்காளர்கள் சிவில் அரசியல்வாதிகள் மீது பழியைச் சுமத்தி வரும் அதேவேளையில், இராணுவத்தின் புகழ் மேலும் அதிகரிக்கும். எந்தவொரு ஜனநாயகத்தைப் பொறுத்தவரையிலும் இது ஒரு நல்ல விடயமல்ல.

ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் இலங்கையின் பொருளாதாரம் ஒரு சீட்டுக்கட்டைப் போல மெதுவாக வீழ்ச்சியடைந்த பொழுது, வாக்களிப்பதில் கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகளை பாரதூரமான விதத்தில் கவனத்திலெடுக்க வேண்டிய ஒரு சாத்தியப்பாடு நிலவியது. அதன் விளைவாக, எதிர்காலத்தில் மக்கள் மிகவும் நிதானத்துடன், புத்திசாலித்தனமாக வாக்களிக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால், அந்த நிலை ஒருபோதும் சாத்தியப்படவில்லை. வாக்களிப்பு என்ற விடயம் உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொடுக்கல் வாங்கலுக்குப் பதிலாக இன்னமும் கூட ஓர் உணர்வு ரீதியான செயலாக, விருப்பு வெறுப்புக்களுடன் கூடிய ஓர் உறவாகவே அணுகப்பட்டு வருகின்றது. எமது வாக்குகளை அளிப்பது எப்படி என்ற விடயத்தைத் தீர்மானிப்பது தொடர்பாக வாக்காளர்களுக்கு அறிவூட்டும் ஒரு கொள்கையை நாங்கள் பின்பற்றினாலேயே ஒழிய, இந்த சாபத்திலிருந்து நாங்கள் ஒருபோதும் மீண்டு வர முடியாது. வாக்களிக்கும் பொழுது, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கென தவறிழைக்கக் கூடிய ஒரு தலைவரைஃ அரசாங்கத்தை நாங்கள் கொள்வனவு செய்கின்றோம். அதனையடுத்து ஏனைய அனைத்தும் கானல் நீராகும்.

